# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, மே 03 2019. இதழ் - 62









**காத்தான்குடி உங்களை வரவேற்கிறது!**

இந்தத் தலைப்பே கொஞ்சம் உணர்வுபூர்வமானது

பக்கம் - 03

**சொல்லத் துணிந்தேன்!**

மட்டக்களப்பு பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கடந்த வருடம் (30/11/2018)

பக்கம் - 10



**பெண் உடலைக் கட்டுப்படுத்து வதிலிருந்தே தீவிரவாதங்கள் வெளிப்படுகின்றன**

பக்கம் -05



**'அப்பெல்லாம் தளப்பத்துதான் குடை'**

'இப்ப கொஞ்ச காலமாகத்தான் நவீன

பக்கம் - 12



# ஞாயிறு ஆராதனைகளைத் தவிர்க்குமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் கோரிக்கை

(நி.அமிர்தஸன்)

கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு பிரதேசங்களில் சென்ற உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் இதுவரை கிறிஸ்தவ மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான நம்பிக்கையான உத்தரவாதங்கள் கிடைக்காதால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் தேவாலயங்களுக்குச் செல்ல வேண்டாமென இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் போராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

தேவாலயங்களில் ஞாயிறு ஆராதனைகளை நடத்துவதை தவிர்க்குமாறு வலியுறுத்தி பேராயர் கார்தினால் மல்கம் ரஞ்சித் வியாழக்கிழமை முற்பகல் அனைத்து மறைமாவட்ட ஆயர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பாதுாப்புக்காரணங்களுக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமையும் திருப்பலிப் பூஜைகள் இடம்பெறவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் ஆராதனைகளுக்குச் செல்ல வேண்டாமென பேராயர் கர்தினால் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்பதியடைந்துள்ள பேராயர் கர்தினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய குண்டுதுளைக்காத வாகனத்தையும் ஏற்க மறுத்திருந்தார்.

தங்கள் பாதுகாப்பை விட மக்கள் பாதுகாப்பே முக்கியமானதெனவும் பேராயர், அரசாங்கத்திடம் கூறியிருந்தார்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை பள்ளிவாசல்களில் தொழுகைகளை நடத்தலாமா என்பது குறித்து கொழும்பு பெரிய பள்ளிவாசல் ஆராய்வதாக

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலய வைகாசி குளுத்திவிழாவில்

## இம்முறை கடைத்தெருக்கள் இல்லை - வெளிஊர்வலம் இல்லை!

*நாட்டின் அசாதாரண சூழலையடுத்து ஆலய நிருவாகம் ஏற்பாடு*




(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசி திருக்குளிர்த்திச் சடங்கு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் நடைபெறவிருக்கிறது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக கீழ்வரும் சில இறுக்கமான

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# குற்றமிழைக்காத என்னுடைய கணவரை இன்னும் ஏன் தடுத்து வைத்துள்ளீர்கள்?'

## -- ஜனாதிபதியிடம் உருக்கமான வேண்டுகோள்

'வவுணதீவு பொலிஸ் படுகொலையுடன் தொடர்புடைய உண்மையான கொலையாளி கண்டுபிடிக்கப்பட்டிருந்தும் சம்பவத்துடன் தொடர்பில்லாத என்னுடைய கணவர் அஜந்தனை தடுத்து வைப்பது நியாயமல்ல. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றமிழைக்காத என்னுடைய கணவரை விடுதலை செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு என் கணவரை விடுதலை செய்யாவிட்டால் நானும்,எனது 5 பிள்ளைகளும் நஞ்சு குடித்து தற்கொலை செய்வோம்' என திருமதி செல்வராணி இராஜகுமாரன் என்ற பெண் தெரிவித்தார். மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் படுகொலையுடன் தொடர்பில்லாத, சந்தேகத்தின்பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள காதிர்காமத்தம்பி இராஜகுமாரனின் (அஜந்தன்) விடுதலை சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவரது மனைவி



தொடர்ச்சி... (பக்கம் -15 )




## திருக்கோவில் வாராந்தச் சந்தை நாளாந்தச் சந்தையாக மாற்றம்!

### *அசாதாரண சூழலையடுத்து திருக்கோவில் பிரதேசசபை அதிரடித் தீர்மானம்!*



(காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலையடுத்து காலாகாலமாக வாராந்தச் சந்தையாக இயங்கிவந்த திருக்கோவில் பிரதான சந்தை நாளாந்தச் சந்தையாக மாற்றப்பட்டுள்ளது என திருக்கோவில் பிரதேசசபைத் தவிசாளர் ஆர்.டபிள்யு. கமலராஜன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பிரதேசசபை அமர்வில் இது விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டு, கலந்துரையாடப்பட்டு, இறுதியில் இத்தகைய தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் "பொது இடங்களில் மக்கள் கூட்டங்கூட்டமாகச் சேர்வதை தரித்து நிற்பதை முடிந்தளவு தவிர்க்கவேண்டும்" என்ற ஆலோசனைக்கிணங்கவே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தவிசாளர் கமலராஜன் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வாராந்தச் சந்தையில் அதிகளவான மக்கள் ஒன்றுகூடுவது வழமை. அது அசம்பாவிதத்தை உண்டுபண்ணுவதற்கு ஏற்ற களமாக மாறலாம் என்பதையுணர்ந்து தினச்சந்தையாக மாற்றப்பட்டுள்ளது.

தினச்சந்தை எனின் குறிப்பிட்டளவு மக்களே வந்து செல்வார்கள். கூட்டம் கூடுவது அரிதாகவிருக்கும் என்பதால் மேற்படி முடிவு எட்டப்பட்டது என்றார்.

கடந்த ஞாயிறு சந்தைக்கு தானும் திருக்கோவில் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜயவீரவும் நேரடியாக விஜயம்செய்து பொருட்களின் விலைகளை ஆராய்ந்ததாகத் தெரிவித்த தவிசாளர் கமலராஜன், எந்தக்காரணம் கொண்டும் ஏனைய சந்தைகளோடு ஒப்பிடுகையில் விலைகளை அதிகரித்து விற்கக்கூடாதென்பதை வர்த்தகர்களுக்கு வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

திருக்கோவில் வர்த்தகசங்கத்தினரும் அதற்கு ஒத்துழைத்து வருகின்றனர்.

## அவசரக் கூட்டத்தில் 'அரங்கம்' பத்திரிகையில் ஆழ்ந்த பொலிஸ் அதிகாரி!



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் இஸதீன் லத்தீப் ஏற்பாடுசெய்த இனமத நல்லிணக்க அவசரக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரியொருவர் கிழக்கில் வெளிவரும் அபிமான ஜனரஞ்சக வாராந்தப் பத்திரிகையான அரங்கத்தை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவதையும் முன்னே மதத்தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: காரைதீவு சகா)

## உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளுக்காக அஞ்சலி



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்றை மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவம் பெண்கள் கூட்டமைப்பு நேற்று நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம். அனைத்து இனங்களையும் சேர்ந்த அந்த அமைப்பின் உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி...

## ஞாயிறு ஆராதனைகளை...

கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு வழிபாடுகளை தவிர்ப்பது குறித்தும் அவை சிந்திப்பதாக அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

குருநாகல் குளியாப்பிட்டியில் உள்ள பள்ளிவாசல் மீது புதன்கிழமை இரவு சில நபர்கள் கற்களைவீசித் தாக்கியுள்ளதாகவும் ஆனாலும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லையெனவும் குளியாப்பிட்டி பொலிஸார் கூறியுள்ளனர்.

## காரைதீவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேடகூட்டம்!



நாட்டிலேற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை மற்றும் சாய்ந்தமருது குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து காரைதீவுப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான விசேட கூட்டம் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் பொதுநூலககேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஆலயத் தலைவர்கள் அதிபர்கள்



பொதுஅமைப்புகளின் பிரமுகர்கள் சமுக ஆர்வலர்கள் உள்ளிட்ட பல தரப்பினர் கலந்துகொண்டு ஆலோசனைகளை தெரிவித்தனர்.
படங்கள் காரைதீவு நிருபர் சகா

## கிழக்கில் பாடசாலைகள் ஆரம்பிப்பது குறித்து உயர்மட்டக்கூட்டம்: பிரதம செயலாளர் ஏற்பாடு!

### *திங்களன்று தமிழ் சிங்களப் பாடசாலைகள் மட்டும் முதலில் ஆரம்பம்*

(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக இன்று(03) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் பிரதமசெயலாளர் அலுவலகத்தில் உயர்மட்டக்கூட்டம் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் சரத் அபேகுணவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ள இம்முக்கிய கூட்டத்திற்கு கிழக்கு மாகாணகல்விச்செயலாளர் முத்துபண்டா கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் உள்ளிட்ட உயர்மட்ட கல்வி நிருவாகிகள் கலந்தகொள்வார்கள். கிழக்கிலுள்ள 17 கல்வி வலயங்களின் வலயக்கல்விப்பணிப்பாளர்களும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 6ஆம் திகதி அரச தமிழ் சிங்களப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக மீண்டும் 5வார நீண்டவிடுமுறையின் பின்னர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் திறக்கப்படவுள்ளன.

கடந்த 22ஆம் திகதி திறக்கப்படவிருந்த தமிழ், சிங்களப்பாடசாலைகளுக்கு நாட்டிலேற்பட்ட அசாதாரணசூழ்நிலை காரணமாக கடந்த இருவாரங்களாக விசேடலீவு வழங்கப்பட்டிருந்தது. இதேவேளை முஸ்லிம் பாடசாலைகள் கடந்த 17ஆம் திகதி திறக்கப்படவிருந்தும் அசாதாரண சூழ்நிலை காரணமாக விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் புனித ரமழான் நோன்பு விடுமுறை 2019.05.04ஆம் திகதி தொடக்கம் 2019.06.09ஆம் திகதி வரை முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஆதலால் எதிர்வரும் திங்கள்(6) முஸ்லிம்பாடசாலைகள் திறக்கப்படமாட்டாது. ஆக தமிழ் முஸ்லிம் பாடசாலைகள் மட்டுமே திறக்கப்படவிருக்கின்றன.

## கல்முனை பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய அத்தியட்சகர் ஜி.சுகுணன்!



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலையில் வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த நிலையிலையே குறித்த இடமாற்றமானது சுகாதார சேவைகள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. களுவாஞ்சிகுடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ் பல்கலைக் கழகத்தில் தனது மருத்துவ பட்டத்தினைப்பெற்று, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றிய வேளையில் வைத்திய நிருவாக துறைசார்ந்த முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இதன் அடிப்படையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு 2011 ஆம் ஆண்டு வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் வைத்திய அத்தியட்சகராக தனது கடமையை பொறுப்பேற்று இன்று வரை சுமார் எட்டு வருடங்கள் மிகச்சிறப்பாகக் கடமையாற்றியுள்ளார். இவர் வைத்தியத்துறையில் நிருவாகத்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்றார்.

தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய புதிய வைத்திய அத்தியட்சகராக கொழும்பு வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் டாக்டர்.அசீஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமையை விரைவில் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார் என எதிர் பார்க்கப்படுகின்றது.




# காத்தான்குடி உங்களை வரவேற்கிறது!

இந்தத் தலைப்பே கொஞ்சம் உணர்வுபூர்வமானது என்பதை மனதில் வைத்தே இதனை இட்டிருக்கிறேன். ஒரு மாதத்துக்கு முன்னதாக இப்படி ஒரு தலைப்பை நான் எனது கட்டுரை ஒன்றுக்கு வைத்திருப்பேனா என்று என்னால் கூறமுடியாது. ஆனால், இது பல விடயங்கள் பற்றி பேசவேண்டிய தருணம்.

காத்தான்குடி என்ற பெயரே கடந்த சில நாட்களாக இங்கு சர்ச்சைக்கு உரிய ஒரு சொல்லாக மாறியிருக்கிறது என்பது உண்மை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி ஒருவர் அங்கு பிறந்தார் என்பதும், தாக்குதலாளிகள் சிலராவது அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதும் இதற்குக் காரணம்.

மட்டக்களப்பு நகரில் இருந்து சில மைல்கள் தூரத்தில் கடற்கரை ஓரமாக அமைந்திருக்கின்ற இந்தச் "சிற்றூர்" நகரம் என்றோ கிராமம் என்றோ இலகுவில் பிரித்தறிய முடியாத ஒன்று. ஆனால், சனநெருக்கடி மிக்க ஒரு ஊர்.

மட்டக்களப்புத் தமிழர்கள் என்னதான் முஸ்லிம்கள் மீது விமர்சனத்தை முன்வைத்தாலும் ஒரு உணவு விடுதியில் ஜாலியாகச் சாப்பிட வேண்டுமானால் அதிகமாகச் செல்லும் இடம் இதுதான். முஸ்லிம்களின் வணிகங்களை புறக்கணிக்க வேண்டும் என்ற



பிரசாரங்கள் முன்வைக்கப்பட்ட காலகட்டங்களில் கூட மட்டுநகர் தமிழர்கள் காத்தான்குடி செல்வதும், அங்கு உண்பதும் என்றும் குறைந்தது கிடையாது.

இன்று நேற்றல்ல, "டல் கோப்பி" என்று அழைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய கோப்பிக்கடைகளுக்கு காத்தான்குடி பிரபலமாக இருந்த பல தசாப்தங்களுக்கு முன்பிருந்தே இந்த நிலைமைதான்.

பாய் பின்னுதலும் பன் உற்பத்திப் பொருட்களும் சாரன்கள் என்னும் லுங்கிகளும் பிரபலமாக விற்பனை செய்யப்பட்ட காத்தான்குடியின் பரிமாணம் இன்று மாறிப்போய் இருக்கிறது. கிழக்கில் வணிகத்தில் சிறந்து விளங்கும் ஆட்கள் நிறைந்த ஊர். காத்தான்குடியில் மாத்திரமல்லாமல் மட்டக்களப்பு நகரிலும் கணிசமான கடைகள் காத்தான்குடிக்காரர்களுக்கே சொந்தமானவை.

கிழக்கு மாகாணத்தில் வாகனம் ஓட்டுபவர்களைக் கேட்டால் ஒன்றை உறுதியாகக் கூறுவார்கள். அதாவது எந்த அகால நேரத்தில் போனாலும் காத்தான்குடியில் உணவுக்கடை திறந்திருக்கும் என்பதுதான் அது. அங்கு கிடைக்காத எந்தப் பொருளும் கிடையாது. இந்த வசதிகள் கிழக்கு மாகாணத்தில் எந்த ஊரிலும் கிடையாது.

காத்தான்குடிக்காரர்கள் மிகுந்த திறமைசாலிகள்; கடினமான உழைப்பாளிகள்.

ஆனால், முன்பகுதியில் கூறியது போல இப்போது எல்லா கரங்களும் காத்தான்குடியைச் சுட்டுகின்றன.

தாக்குதலாளிகளின் தலைவர் என்று கூறப்படுபவர் (தலைவர் யார் என்பது சில வேளைகளின் பின்னர் மாறலாம்) காத்தான்குடிக்காரர், மட்டக்களப்பு சியோன் தேவாலய தாக்குதலாளி காத்தான்குடிக்காரர் என்ற காரணத்தால் எல்லோர் கரங்களும் காத்தான்குடியை சுட்டுகின்றன. தமிழர், சிங்களவர் என்றல்ல சில ஏனைய ஊர்களைச் சேர்ந்த முஸ்லிம்களும் சுட்டுவிரலை நீட்டி காத்தான்குடியை குற்றஞ்சாட்டுகிறார்கள். "எல்லாத்துக்கும் இந்தக் காத்தான்குடிக்காரந்தான் காரணம் அண்ணன்" என்று என்னிடம் ஒரு முஸ்லிம் செய்தியாளரே சொன்னார். இதெல்லாம், விடுதலைப்போராட்டம் ஆரம்பித்து, குண்டுகள் வெடிக்கத் தொடங்கிய போது, "இதுக்கெல்லாம் யாழ்ப்பாணத்தாந்தான் காரணம் என்று ஏனைய இடங்களைச் சேர்ந்த சிலர் சொன்னதற்கு நிகரானது. அது தவறு. இங்கு எல்லோருக்கும் பொறுப்பு உண்டு.

காத்தான்குடியில் நடந்தவை குறித்து எனக்கும் விமர்சனம் உண்டு. ஆனால், அதற்காக காத்தான்குடியை தனிமைப்படுத்த முடியாது.

காத்தான்குடியில் 2017 இலேயே இந்தத் தீவிரவாதக் குழுவுடன் மோதல்கள் நடந்துள்ளன. அப்போதெல்லாம் அங்கு கத்திகளும் வாள்களுமே அதிகபட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இரு வருடங்களில் குண்டுகளும் தற்கொலைத்தாக்குதலாளிகளும் தயாராகியிருப்பதைப் பார்த்து அந்த ஊரே அதிர்ந்துபோய் இருக்கிறது.

இரு வருடங்களுக்கு முன்னரே உங்கள் ஊரில் தீவிரவாதிகள் இருப்பது தெரிந்தும் ஏன் அது குறித்துப் பேசவில்லை என்று கேட்டதற்கு காத்தான்குடி மக்கள் கூறிய பதில் நியாயமானதாகவே பட்டது. 'அவர்கள் குறித்து அனைத்துத் தரப்புக்கும் முறையிட்டுள்ளோம், ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை' என்கிறது காத்தான்குடி சிவில் சமூகங்களின் சம்மேளனம். அதனைவிட ஒரு சிவில் சமூகத்தால் எதனைச் செய்யமுடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது பற்றி (அது நடந்தது 1990இல்) 2002இல் விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் ஒரு செய்தியாளர் சந்திப்பில் அதனை 'ஒரு வரலாற்றுத்தவறு' என்று கூறும்வரை 12 வருடங்களாக சில மாற்றுக்கருத்தாளர்களைத் தவிர, தமிழ் சமூகத்தில் இருந்து எவரும் பேசவில்லை.




எம்மிடம் தமிழ் சிவில் சமூகம், யாழ் சிவில் சமூகம் என்றெல்லாம் எவ்வளவோ அமைப்புக்கள் இருந்தும் அதனைப் பற்றிப் பேச தமிழ் சமூகத்துக்கு 12 வருடங்கள் பிடித்தன. காத்தான்குடி பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களை அடுத்து தமிழ் கிராமங்கள் தாக்கப்பட்டதால், அதனைப்பற்றியும் தமிழர் தரப்பில் பேசப்படவில்லை. ஆனால், தேவாலயங்கள் தாக்கப்பட்டமை குறித்து ஒரு வாரத்தில் காத்தான்குடி சிவில் அமைப்புக்களின் சம்மேளனம் மன்னிப்புக் கோரியுள்ளது. அந்த வகையில் காத்தான்குடிச் சமூகம் மேம்பட்டு நிற்கிறது. அதனை நாம் மதித்தாக வேண்டும். அந்தச் சமூகத்தின் மீது குற்றம் சுமத்தும் எவரும் இதனை மனதில் கொண்டாக வேண்டும். காத்தான்குடி மக்கள் அல்லது அதன் தலைவர்கள் அனைவரும் செய்த எல்லாம் சரி என்று நான் கூறமாட்டேன். ஆனால், அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் தனிமைப்படுத்த முடியாது.

**சீவகன் பூபாலரட்ணம்**

காத்தான்குடி கடந்த சில நாட்களாக கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. பலரிடம் இதுபற்றிக் கதைத்த போது அங்கு வாழும் மக்கள் நிலைகுலைந்து போயிருப்பதை உணரக்கூடியதாக இருக்கிறது. இந்த அனுபவம் தமிழ் சமூகத்துக்கு ஏற்கனவே இருக்கிறது. இங்கு நாம் தனிமைப்படுத்தப்பட்ட காலம் ஒன்று உண்டு. அந்த நிலைமை ஏனைய சமூகங்களுக்கு வர நாம் அனுமதிக்க முடியாது. பெரிய கடைகளை வைத்திருப்பவர் முதல் ஆட்டோ ரிக்‌ஷோ ஓட்டுநர் வரை மன வலியில் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த மன்னிப்பு கோரலுக்கும், மனவலிப் பிரதிபலிப்புக்கும் "பயம்" உட்பட வேறு காரணங்களை நாம் கற்பிக்க முடியும், சில சந்தர்ப்பங்களில் அது உண்மையாகவும் இருக்கலாம், ஆனால், நாம் அவர்களை தனிமைப்படுத்த அனுமதிக்க முடியாது. அந்த ஊரில் பாதுகாப்புச் சோதனைகள் முற்றாக முடிந்துவிட்டதா என்பதும் நமக்குத் தெரியாது, சல்லடை போட வேண்டிய தேவை இன்னமும் இருக்கிறதா என்றும் தெரியாது. ஆனால், நடவடிக்கைகள் எல்லாம் பொருத்தமான அளவுக்கு மாத்திரம் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால், மேலும் இளைஞர்கள் பயங்கரவாதத்தின் பக்கம் ஈர்க்கப்படுவதும் தவிர்க்க முடியாமல் போய்விடக் கூடும். பல மதத்தலைவர்கள் சமூக நல்லிணக்கத்துக்காக சில நிகழ்வுகளை இங்கு வைபவ ரீதியாகச் சடங்குபோலச் செய்வதைக் காணமுடிகிறது. ஆனால், இந்த வைபவ ரீதியான நிகழ்வுகள் எல்லாம் பெரும் பலனைத்தராது. சில நாட்களில் இவை முடிவுக்கு வந்துவிடும். சமூகங்களின் ஊடாட்டம் என்பது ஒருவரை அடுத்தவர் வீட்டு வாசலுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அடிமட்டத்தில் இருந்து அது வரவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை பெரிய அளவில் இந்த மதத்தலைவர்கள் செய்ததாக என்னால் முழுமையாக நம்ப முடியாது.

குண்டு வெடிப்பை மக்கள் மறக்க அவர்களும் அப்படியே விட்டுவிடுவார்கள். உண்மையான நல்லிணக்கம் என்பது வெறும் ஜோடனைப் பொருள் போல ஆகிவிடும். ஆக, காத்தான்குடி மாத்திரமல்ல எந்தவொரு சமூகமும் தனிமைப்படுத்தப்பட முடியாது. தனிமைப்படுத்தப்படுபவர்களே அதிக வலியை அனுபவிப்பர். அது குண்டு வெடிப்பின் வலியைவிட மோசமானது. நாட்டை அது தீவிரவாதத்துக்குள் தள்ளிவிடும்.

# தேவாலயக் குண்டு வெடிப்புகளும் எமது அரசியலும்

தேவாலயக் குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அவற்றினுடைய தலைவர்களும் இக்குண்டு வெடிப்புகளிலிருந்தும் அந்த மக்களின் இரத்தத்திலிருந்தும் தங்களுடைய அரசியல் இலாபங்களை எவ்வாறு அறுவடை செய்து மூட்டை கட்டிக்கொள்ளலாம் என்பதில் காட்டும் ஆர்வம் இனிமேல் இவ்வாறான ஒரு குண்டு வெடிப்பு நடக்கக் கூடாது என்பதில் காட்டுவதாகத் தெரியவில்லை.

நாம் இக் குண்டு வெடிப்பகளில் இரண்டு விதமான அரசியல்களை அவதானிக்கலாம்.

1. மட்டக்களப்பில் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்

2. தேசிய அரசியலில் கட்சிகளினதும் அவற்றின் தலைவர்களினதும் அரசியல்

**1. மட்டக்களப்பில் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்**

தமிழ் அரசுக் கட்சி அல்லது அது தலைமை வகிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தினை வடமாகாண அரசியல் இருப்புக்கான கருவியாகவே பயன்படுத்தி வருவதை பல அரசியல் நோக்குநர்களும் விமர்சகர்களும் முன்வைத்துக் கொண்டே வருகிறார்கள். இங்கு தமிழ் மக்கள் யுத்தத்தினால் மட்டுமல்ல முஸ்லிம் அரசியல் தலைவர்களின் பாரபட்சமான நடத்தைகளினால் காணி ஆக்கிரமிப்புக்கும் வளச்சுரண்டல்களுக்கும் மதமாற்றத்துக்கும், தமிழ் பிரதேச அபிவிருத்தி புறக்கணிப்புக்கும் வேலைவாய்ப்பில் பாராபட்சத்துக்கும் உள்ளாகிக் கொண்டிருந்தவர்கள். அவர்கள் மேல் தற்போது மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சி கிழக்குத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள், போராட்டங்கள், அபிவிருத்தி என்பவற்றில் ஆத்மார்த்தமாக பங்கெடுக்காதது மட்டுமல்ல முஸ்லிம்காங்கிரசின் மனதை நோகடிக்காது தமிழர்களின் வாக்கால் வென்று ஆட்சியை முஸ்லிம் காங்கிரசுக்குக் கொடுத்து அழகு பார்த்தவர்கள், குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து தமிழ் மக்களின் துயர்களில் பங்கு கொள்வதற்காக திரு.சுமந்திரன் அவர்களும் திரு. மாவை சேனாதிராசா அவர்களும் ஓடோடி வந்திருந்தார்கள்.

கலியாண வீட்டுக்கு அழைத்தால் செல்ல வேண்டும் மரண வீட்டுக்கு அழைக்காமல் செல்ல வேண்டும் என்ற சம்பிரதாயம் கருதி வந்தமைக்கு அவர்களின் மனிதாபிமானம் கருதி நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். ஆனாலும் வந்தமா, துயரில் பங்கு கொண்டோமா எனப் போயிருந்தால் பிரச்சினையில்லை. வந்தவர்கள் இருவரும் முக்கிய சந்திப்புகளை நடாத்தி தங்களுடைய அரசியல் இலாபங்களை ஈட்ட முற்பட்டதுதான் கவலையான விடயமாகும்.

சுமந்திரன் அவர்கள் கிழக்கு மக்களின் உரிமைகள் பிரச்சினைகள், அபிவிருத்தி என்பவை தொடர்பாக தனது அறிவையும் செல்வாக்கையும் பயன்படுத்தியவருமல்ல, இந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டவரும் அல்ல. இவர் கிழக்கு மாகாண ஆளுநரை அவருடைய ஆளுநர் இல்லத்தில் சந்தித்திருந்தார். கௌரவ ஆளுநர் அவர்கள் கிழக்குத் தமிழ் மக்களின் நலன்களுக்கும் உரிமைகளுக்கும் எதிராக கடந்த காலங்களில் செயற்பட்டதனால் அவரை கிழக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மக்கள் இரு ஹர்த்தால்களை நடாத்தியிருந்தார்கள். கிழக்குத் தமிழ் மக்களின் நலனில் அக்கறையில்லாத இவர்களிருவரும் சந்தித்த பின்னர் ஆளுக்கொரு செய்தியை மக்களுக்குச் சொன்னார்கள் அதாவது 24.04.2019 அன்றைய தினத்தை வடக்குக் கிழக்கு மக்கள் துக்கதினமாக அனுஸ்டிக்கும்படி சுமந்திரன் கூற அதே நாளை ஹர்த்தால் நடாத்தும்படி ஆளுநர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.



மரண வீடு ஒன்றுக்குச் சென்று அந்த வீட்டிலுள்ளவர்களை துக்கத்துடன் இருங்கள் எனக் கூறுவது எவ்வளவு முட்டாளத்தனமானதோ அதே போன்றதுதான் குண்டு வெடிப்பினால் தமது உறவுகளை இழந்து துக்கத்தில் துய்த்திருந்த கிழக்கு மக்களிடம் துக்கதினம் அனுஸ்டிக்கும்படி சுமந்திரன் கோரியது. இது அவர் கிழக்கு மக்களின் உணர்வுகளில் இருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கிறார் என்பதையே காட்டியது. மக்களின் உணர்வுகளை விளங்கிக் கொள்ளாது சுகபோக அரசியல் நடாத்தும் எமது அரசியல்வாதிகளிடம் இருந்து இவ்வாறான செய்திகளைத்தான் நாம் பெறமுடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

அடுத்த வேடிக்கை, ஹர்த்தால் நடாத்தும்படியான அழைப்பாகும். ஹர்த்தால் என்பது அதிகாரத்துக்கு எதிராக மக்கள் மேற்கொள்ளும் ஒரு போராட்ட நடவடிக்கையாகும் அல்லது ஒரு போராட்ட வடிவமாகும். கிழக்கின் அதிகாரம் ஆளுநரிடமும் மத்திய அரசிடமுமே இருக்கின்றது. ஆளுநர் மத்திய அரசின் பிரதிநிதியாவார். இங்கு ஆளுநர் ஹர்த்தால் நடாத்தும்படி அழைப்பு விடுக்கிறார் என்றால் அது இந்தக் குண்டு வெடிப்பை தடுக்கத் தவறிய மத்திய அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிராகவே அழைப்பு விடுக்கின்றார் என்று அர்த்தமாகும். இவ்வாறு தனது அரசாங்கத்துக்கு எதிராகவே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த ஒரு ஆளுநனராக கிழக்கு மாகாண ஆளுநரே இருக்க முடியும். ஆனால் அவருடைய இந்த வீரதீரச் செயலை தமிழ் மக்கள் கிஞ்சித்துத்தானும் பொருட்படுத்தவில்லை.

அடுத்து, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் 23.04.2019 அன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தமது அணியினருடன் ஒரு கூட்டத்தினை நடாத்தியிருந்தார். அதில் அவர் 'மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் முழு வசதிகள் கொண்ட பிரேத அறை நிர்மாணித்துக் கொடுக்கப்படுவதோடு சட்ட வைத்திய அதிகாரி பற்றாக்குறையையும் நிவிர்த்தி செய்து கொடுக்கப்படும்' என தெரிவித்துள்ளார். இச் செயற்திட்டத்தினை சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரெட்ண அவர்களுடனும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்களுடனும் பேசி பாராளுமன்றத்தில் இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

மாவை சேனாதிராசா அவர்களுக்கும் அவருடைய அணியினருக்கும் மட்டக்களப்பில் மிக முக்கியமான பிரச்சினையாக பிரேத அறைதான் தெரிகிறது. ஏனென்றால் கடந்த காலங்களில் தங்களுடைய உணர்ச்சிப் பேச்சுக்களால் தமிழ் இளைஞர்களை உசுப்பேற்றி பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மரணத்துக்கு காரணமாக இருந்தவர்கள், இனிவரும் காலங்களிலும் தங்களுடைய தவறான வழிநடத்தல்களாலும் தலைமைத்துவங்களாலும் இறக்கின்ற தமிழ் மக்களுக்கு பிரேத அறை ஒன்று தேவை எனக் கருதுகிறார்கள் போலும் அதனால்தான் மட்டக்களப்பில் இவ்வாறு எந்த ஒரு அபிவிருத்தித்திட்டத்திற்கும் இவ்வளவு அக்கறை எடுத்து அமைச்சருடன் கதைக்கின்றேன், சம்பந்தருடன் கதைக்கின்றேன் பாராளுமன்றத்தில் முன்னாயத்த வேலைகளைச் செய்கின்றேன் எனச் சொல்லாதவர் இதற்கு மட்டும் இவ்வளவு அவசரப்பட்டு செய்கின்றார் என்றால் மட்டக்களப்பு மக்களின் சுபீட்சமான வாழ்வை விட அவர்களின் இறப்பைக் கொண்டாடுகிறார் என்றுதான் அர்த்தமாகும்.

இலங்கையில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் சமூகநலன்புரியிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மட்டக்களப்பை அவற்றை மேம்படுத்துவதற்குரிய அடிப்படைக் கட்டுமானங்களை அமைக்காது அவற்றினால் மரணிக்கப் போகும் மக்களுக்கு பிரேத அறை அமைத்துக்கொடுத்து அரசியல் செய்கிறார்கள். இவர்களுடைய அரசியல் இலாபங்களுக்காக கிழக்கு மக்கள் கொத்துக் கொத்தாக மரணிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் கட்டிக் கொடுக்கப்படும் பிரேத அறைகள் பயனுள்ளதாக அமையும். இதுதான் தமிழ் அரசுக் கட்சியினரின் அரசியலாக இருக்கின்றது.

எழுவான் வேலன்

2. தேசிய அரசியலில் கட்சிகளினதும் அவற்றின் தலைவர்களினதும் அரசியல்

அண்மையில் காஸ்மீரில் இராணுவத்தினர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட போது அதனை எவ்வகையிலும் அரசியலாக்காது இந்தியாவிலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு மோடி அரசுக்கு தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்கின. இது போன்றே அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலிலும் அமெரிக்காவின் அனைத்து அரசியல் கட்சிகளும் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் ஓரணியில் நின்றன. இவ்வாறு உலகில் பல உதாரணங்களைக் குறிப்பிட முடியும். இது இந்த நாடுகளும் அவற்றினுடைய அரசியல் கட்சிகளும் தங்களுக்கிடையிலான கொள்கைகளை விட தங்கள் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கும் அந்த மக்களுடைய உயிருக்கும் வாழ்வுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால் எமது நாட்டில் மட்டும் நிலமை அவ்வாறு இல்லை. தேசிய பாதுகாப்பையும் மக்களின் உயிரையும் வாழ்வையும் அச்சநிலைக்கும் குழப்பநிலைக்கும் கொண்டுவந்து அதன் மூலம் தமது அரசியல் இலாபங்களை அடைவதில் கட்சிகளும் தனிநபர்களும் போட்டி போட்டுக் கொண்டு உழைக்கின்றனர்.

எமது நாட்டின் முக்கிய அதிகார மையங்களாக இருக்கின்ற ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோர் தங்கள் தங்கள் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படுகிறார்களே ஒழிய நாட்டின் நன்மைக்காக மூவரும் எல்லாவற்றையும் மறந்து ஓரணியில் செயற்படுவதாக இல்லை. எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச அவர்கள் முன்னாள் படையதிகாரிகள், புலனாய்வாளர்கள், பாதுகாப்புச் செயலாளர் போன்றவர்களைக் கொண்ட ஒரு குழுவை இஸ்லாமியப் பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்காக தனிப்பட்ட முறையில் உருவாக்கியுள்ளார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்று இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒழிப்பேன் என்கிறார். அதுவரைக்கும் அவர் தனது அறிவையும் அனுபவத்தினையும் திறனையும் இஸ்லாமிய பயங்கரவாதத்தினை ஒழிக்கப் பயன்படுத்தாது மக்களது இறப்பில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# பெண் உடலைக் கட்டுப்படுத்துவதிலிருந்தே தீவிரவாதங்கள் வெளிப்படுகின்றன

புர்காவைப் பெண்கள் விரும்பி அணிகிறார்கள் என்பதிலெல்லாம் எனக்குத் துளியும் உடன்பாடு இருந்ததில்லை. இப்போதும் இல்லை. பெண் உடல் மீதான ஆண் ஆதிக்கத்தின் வெளிப்பாடு மட்டுமே இந்தப் "புர்கா". இந்த உடை எப்படி அடிப்படைவாதத்தின் கூறாக இருந்து வந்திருக்கிறது என்பதற்கு புர்கா / நிகாப் தடை ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

2016 செப்டம்பர் 23ஆந் திகதி அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா வெளியிட்ட ஒரு பத்வாவில் "நிகாப் முஸ்லிம் பெண்கள் மீது விதிக்கப்பட்டது" என்றது.



(பத்வா இல. 008/F/ACJU/ 2009). அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் இந்த பத்வா, நிகாப் அணியாத பெண்களை விபச்சாரிகள் என்று சொல்லவைத்தது. அதே ஜம்மியதுல் உலமாதான் 2019 ஏப்ரல் 29 அன்று, பாதுகாப்புக் காரணங்களுக்காக புர்கா / நிகாபைத் தடை செய்யும் அரசின் தீர்மானத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

2016 இல் நிகாப் / புர்கா பெண்கள் மீது கடமை என விதிப்பதற்கு ஜம்மியதுல் உலமாவுக்குத் தூண்டுதலாக இருந்தவை அல்குர்ஆன் வசனங்களா? சுன்னாவா? அல்லது இரண்டுமேவா? இஸ்லாத்தின் எந்த அடிப்படையில் இந்த வழிமொழிதலை ஜம்மியதுல் உலமா நிறைவேற்றியது? இப்போது திரையை விலக்கச் சொல்லிப் பெண்களைக் கேட்பது இஸ்லாமிய விதிமுறைகளுக்கு உட்பட்டா அல்லது இல்லையா என்பதைக்கூட ஜம்மியதுல் உலமா தெளிவுபடுத்தவே இல்லை. ஜம்மியதுல் உலமா போன்ற ஆண்களை மையமாகக் கொண்ட ஒரு நிறுவனத்திற்கு பெண்களை கட்டியாள வேண்டுமேயொழிய இஸ்லாம் என்ன சொல்லியுள்ளது என்பதை மீள்வாசிப்புச் செய்வது, தெளிவுபடுத்துவது என்பதிலெல்லாம் எந்த அக்கறையுமில்லை என்பது தெளிவாகிறது. அப்படியிந்திருந்தால், பெண்களுக்கு நிகாப்/ புர்கா அவசியம் என்று குர்ஆன் வலியுறுத்தியிருந்தால் இன்று ஜம்மியதுல் உலமா இந்த தீர்மானித்திற்கு வந்திருக்கவே கூடாது. பெண்கள் மீது மார்க்கம் கடமையாக்கிய ஆடையை அணிவதற்கான உரிமைக்காகத் துணிந்து நின்றிருக்க வேண்டும்.

ஐஎஸ் தீவிரவாதிகளின் ஊடுருவல் குறித்து 2016 இலேயே புலனாய்வுத் துறைக்கு அறிவித்தோம் என்று ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின்னராக, சகல மதத்தலைவர்களுக்கும் நடந்த கூட்டமொன்றில் ஜம்மியத்துல் உலமா தெரிவிக்கிறது. இந்த எச்சரிக்கையை ஏன் பகிரங்கமாக மக்களுக்கு அறிவிக்கவில்லை? கொடிய இந்தச் சக்திகளிடமிருந்து மக்கள் அவதானமாக இருப்பதற்கான முன்னெச் சரிக்கைகளை ஏன் செய்யவில்லை? விவாக / விவாகரத்துச் சட்டத் திருத்தத்தினை எதிர்த்து மக்களைத் திரட்டிக் கொண்டு செயற்படத் தெரிந்த ஜம்மியதுல் உலமாவினால் தீவிரவாதிகளின் ஊடுருவலை புலனாய்வுக்கு அறிவித்துவிட்டுச் சும்மா இருக்க மட்டும் முடிந்தது ஏன்?

இஸ்லாமிய அடிப்படைவாதச் சிந்தனைகளின் தாக்கம் இலங்கையில் ஐஎஸ் தீவிரவாதிகள் ஊடுருவியதன் பிற்பாடு வந்த ஒன்றல்ல. அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையே கூட அடிப்படைவாத சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்ட சுயாதிக்க நிறுவனம்தான். நோய் எதிர்ப்பு சக்தியற்ற சமூகத்தை உருவாக்கிய பொறுப்பு ஜம்மியதுல் உலமாவுக்கும் இருக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியற்ற உடலைத் தாக்குவது எப்படி வைரஸ் கிருமிகளுக்கு இலகுவானதோ அப்படித்தான் ஐஎஸ் தீவிரவாதம் இலங்கை முஸ்லிம்களிடையே பரவலாக்கம் அடைவதும் எளிதாக இருந்திருக்கிறது. கோமா நிலையில் இருந்த அரசு, இந்த பரவலாக்கத்திற்கு இன்னொரு காரணம்.

முஸ்லிம்களிடையே தீவிரவாத சக்திகள் உருவாகுவதை அரசு வேண்டுமென்றே அனுமதித்திருக்கிறது. முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம்களை பலியெடுக்கும் /களையெடுக்கும் கனவுதான் அரசின் நீண்டகால எதிர்வினைகளற்ற கோமா நிலையின் பிரதிபலன். இஸ்லாமிய தீவிரவாதத்தின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் விதமான வன்முறைகளும், தாக்குதல்களும் கடந்த பல ஆண்டுகளாக சிங்கள அடிப்படைவாத சக்திகளால் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டு வந்திருக்கின்றன. இஸ்லாமிய அடிப்படைவாதமும் சிங்கள அடிப்படைவாதமும் அதிகார மையங்களால் ஊட்டி வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே பார்த்துவிட்டோம்.

இப்படி வளர்க்கப்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாதம் பல்வேறு கூறுகளாக வெளிப்பட்டன. அதிலொன்றுதான் பெண் உடல் மீதான கட்டுப்பாடு.

புர்கா/ நிகாபை அணியச் சொல்லிக் கேட்பதும், களைந்துவிடச் சொல்வதும் இரண்டுமே பெண் உடல் மீதான கட்டுப்பாட்டையே காட்டுகின்றன. ஜம்மியதுல் உலமா என்கிற இந்த அமைப்புக்குப் பெண்களின் உடையைத் தீர்மானிக்கின்ற அதிகாரத்தை யார் அளித்தது என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. இந்த நிறுவனத்தையும் இதில் உள்ள ஆண்களையும் அழைத்துப் பெண்களின் உடை தொடர்பான ஒரு தீர்மானத்தை இயற்றுவதன் மூலமாக நீண்டகாலத் தாகத்தினை நிறைவேற்றியிருக்கிறது பேரினவாத அரசு. இது சிங்களப் பேரினவாத அரசின் நிகழ்ச்சி நிரல்களில் நீண்டகாலமாக இருந்த ஒன்று.

இன்னொரு புறம் சிங்கள மதத்திற்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கும் அரசியல் அமைப்பைக் கொண்ட இலங்கை அரசு அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த விரும்புகிறது. ஒருவன்/ள் விரும்பிய மதத்தையும் கலாசாரத்தையும் பின்பற்ற முடியும் என்ற சுதந்திரத்தினை அரசியலமைப்பினூடாக உறுதிசெய்திருந்தபோதும், தந்திரமாக முஸ்லிம்களின் அடையாள அழிப்பை அவர்களைக் கொண்டே செயல்படுத்தி வெற்றி காண்பதற்கு ஈஸ்டர் தாக்குதலை ஒரு துருப்பாகப் பயன்படுத்தியிருக்கிறது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் நேரடியாக சம்பந்தபட்ட குண்டுதாரிகள் யாருமே புர்கா/ நிகாப் உடையில் தோன்றியிருக்கவில்லை. சந்தேகமின்றி அவர்கள் அனைவரும் ஆண்களாகவே இருந்தார்கள். அரசும் ஜம்மியதுல் உலமாவும் கூட்டாக இணைந்து பெண்களைப் பலியாக்கியுள்ளனர்.

புர்கா/ நிகாப் தடை தொடர்பாக அரச வர்த்தமானியில் தரப்பட்டுள்ள விவரணங்களில், அடையாளத்தை மறைக்கும் எல்லா வகையான திரைகளுக்கும் தடை என்பதுடன், "காதுகள் தெரியும்படியாக" என்பதையும் வலியுறுத்துகிறது. புர்கா/ நிகாப் எனப்படும் முகத்திரைகளுக்குத் தடை என்று சொல்லப்பட்டபோதும் காதுகள் தெரியும்படியாக எனும்போது சாதாரண ஹிஜாப் கூட அணியமுடியாதபடியே இந்த விதி உள்ளது. அனைத்துப் பொது இடங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்வதனூடாக முஸ்லிம் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற, குற்றவுணர்வுக்குள்ளாக்கும் சூழ்நிலையை வலிந்து ஏற்படுத்தியிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தின் ஆன்மையைச் சீண்டியுள்ளது. இந்த தீர்மானம் நிறைவேற்றமும் சட்டமும் ஒரு சமூகத்தின் மீதான சந்தேகமற்ற அத்துமீறல்.

மூன்று தசாப்தகாலப் போர் அனுபவங்களிலிருந்து பார்த்தோமானால் விடுதலைப் புலிகள் அமைப்பில் தற்கொலைக் குண்டுதாரிகளாகப் பெண்கள் இருந்தார்கள். அவர்கள் யாரும் புர்கா/நிகாப் அணிந்து தாக்குதல்களைச் செய்திருக்கவில்லை. புர்கா/நிகாப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதெல்லாம் கட்டுக் கதைகள். குண்டுகளை வெடிக்கச் செய்யும் தற்கொலையாளி எந்த உடையிலும் அதனைச் செய்துவிடமுடியும். பிகினி உடையில்கூட அது சாத்தியம்.

ஆக மொத்தத்தில் இங்கே, மதவெறியும், அரச பயங்கரவாதமும் பெண்ணுடலைக் கட்டியாள்வதில் வென்றிருக்கின்றன.

**ஸர்மிளா ஸெய்யித்**
(எழுத்தாளர்/சமூக செயற்பாட்டாளர்)

புர்கா/ நிகாப் அரசியல் குறித்து நீண்ட காலமாகப் பேசியும் எழுதியும் விமர்சித்து வந்துள்ளேன். பெண்கள் தீர்மானிக்கும் சக்திகளாக இல்லாத பொம்மைகளாக ஆண்களால் சமைக்கப்பட்டிருந்ததும், மத அடிப்படைவாதம் பெண்கள் மீது திணிக்கும் கலாசார இறுக்கத்தைக் குறித்துமே அந்த விமர்சனங்கள். அவை எவ்வளவு மெய்யானவை என்பதை காலம் மீண்டுமொருமுறை நிரூபித்திருக்கிறது.

இதுவரை காலமும் முஸ்லிம் பெண்களின் நலன்களில் எதுவித அக்கறையையும் வெளிப்படுத்தியிராத அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபைக்கு பெண்கள் சார்பாக தீர்மானிக்கும் எந்த உரிமையும் கிடையாது. பெண் கத்னா, திருமண விவாக விவாகரத்துச் சட்டத் திருத்தம் போன்றவற்றில் வெளிப்பட்ட நிலைப்பாடுகள் இவர்கள் பெண்களின் நலன்களில் அக்கறையற்றவர்கள் என்பதற்கான தெளிவான சான்றுகள். உண்மையாகவே முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பை உறுதி செய்யவும் அவர்களது நலன்களின் அக்கறையை வெளிப்படுத்தவும் விரும்புவதாக இருந்தால் தடை செய்யவேண்டியது அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையையே. பதிலாக முற்போக்குச் சிந்தனைகளையும், மாற்றுக் கருத்துக்களையும் உள்வாங்கக்கூடிய பெண்களின் பிரதிநிதித்துவத்துடனான, பெண்களின் உரிமைகளைக் கௌரவங்களை மதிக்கும், இஸ்லாத்தின் சட்ட திட்டங்களையும் வாழ்க்கை முறைகளையும் நெகிழ்வுத்தன்மையுடன் சமகாலத்திற்கு ஏற்ற வகையில் மீள்வாசிப்புச் செய்யக்கூடிய மார்க்க அறிஞர்களையும், கற்ற சமூகத்தையும் சேர்ந்தவர்கள் இணைந்த ஓர் அமைப்புக் குறித்து முஸ்லிம் சமூகம் சிந்திக்க வேண்டும்.

**அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!**
**கால்பக்கம் - ரூபா 2500**
**அரைப்பக்கம் - ரூபா 5000**
**முழுப்பக்கம் - ரூபா 10,000**
**சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே**



# பட்டறிவு

## புர்கா தடையின் பிதாமகர்கள்!




புர்கா, நிகாப் என்பவற்றை அணிவதற்கான தடை இப்போது அமுலுக்கு வந்துள்ளது. ஈஸ்டர் படுகொலைகளுக்குப் பின்னர் புர்கா அணிந்த பெண்களை பொதுப் போக்குவரத்து பஸ்களில் இருந்து இறக்குவதும், பஸ்கள், தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றின் வாசலிலேயே "புர்கா அணிந்து உள்ளே வராதீர்" என்கிற வாசகத்தைக் கொண்ட அறிவித்தல்களை ஒட்டியிருந்ததைக் காண முடிந்தது. புர்கா அணிந்த பெண்கள் கற்களால் தாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகின. புர்கா அணிந்த பெண்களை சிங்களவர்கள் சண்டித்தனத்துடன் அழைத்து விசாரிக்கும் வீடியோக்களும் சமூக வலைத்தளங்களில் பரவின.

குருநாகல் மேயரும் மற்றும் ஜா-எல நகரசபைத் தலைவரும் தமது எல்லைக்குள் புர்காவுக்கு தடை விதிப்பதாக அறிவித்திருந்தார்கள்.

அபாயா, புர்கா, நிகாப் போன்ற பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் வகையில் ஆடைகள் அணிவதை தடைசெய்யும் சட்டதிட்டங்களை நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள பகிரங்கமாக தெரிவித்து வந்தார். இதனை அமைச்சரவையில் தீர்மானமாக நிறைவேற்ற நிர்ப்பந்தித்தவர்களில் முக்கியமானவர் தலதா அத்துகோரள.

26ஆம் திகதியன்று நிகழ்ந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான யோசனையை முன்வைத்தபோது பிரதமர், ரணில், மங்கள சமரவீர, ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்திருந்ததாகவும் பாட்டளி சம்பிக்க ரணவக்க, ரவி கருணாநாயக்க, மனோகணேசன், அகிலவிராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சந்திராணி பண்டார ஆகியோர் இந்த யோசனைக்கு ஆதரவளித்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் பின்னர் பிரதமர் காரியாலயாத்திலிருந்து வெளியிடப்பட்ட மறுப்பறிக்கையொன்றில் ரணில் அதனை எதிர்க்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

### ஜனாதிபதியின் தடை அறிவித்தல்

ஆனால் அதன் பின்னர் பாதுகாப்பு தரப்பு மற்றும் பொது அழுத்தத்தின் விளைவாகவும் ஜனாதிபதி இந்தத் தடையை அமுலுக்கு கொண்டுவந்தார். ஆனால் அந்தத் தடை நிரந்தரமானதல்ல. 29ஆம் திகதி ஜனாதிபதி அந்தத் தீர்மானத்தை வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் (Gazette Extraordinary No. 2120/5, of April 22, 2019) வெளியிடப்பட்டது, பொதுப்பாதுகாப்பு விதியின் 5வது பிரிவின் 40வது அத்தியாயத்தின் கீழ் அவரசகால சட்ட விதிகளின் படி அந்த விதிகளைப் பிறப்பித்திருந்தார். பிறப்பிக்கப்பட்ட ஏழு புதிய விதிகளில் நான்காவது விதியில் 32A என்கிற விதி "பொது இடங்களில் முழு முகத்தையும் மூடும் ஆடைகள் அணிவதை தடை செய்வதாக அறிவித்துள்ளது. அந்த விதியின் கீழ் "பொது இடம்", "முழு முகம்", "பொது வீதி" என்பவற்றுக்கான வியாக்கியனானமும் கூறப்பட்டுள்ளது.

"முழு முகம்" என்பதானது ஒரு நபரின் காதையும் உள்ளடக்கிய முகம்" என்று

**என்.சரவணன்**

வரையறுக்கிறது.

இது ஒரு நிரந்தரத் தடை இல்லை. அவரசகால சட்டத்தின் கீழ் தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவரசகால சட்டம் அமுலில் இருக்கும் காலங்களில் இந்த விதிக்கு வலிமை இருக்கும். மக்களின் சாதாரண பொது உரிமைகளை கட்டுப்படுத்தும் பல நூற்றுக்கணக்கான விதிகளைக் கொண்ட அவசரகால சட்டத்தை கடந்த பல்லாண்டுகளாக தமிழ் மக்கள் அதிகமாக அனுபவித்து வந்த அதே நேரம் நாட்டு மக்கள் அனைவருமே அவ்விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இன்றைய ISIS அச்சுறுத்தலின் பின் எங்கேயும்-எவராலும்-எப்போதும்-எதுவும்-நிகழலாம் என்பதே எந்த முஸ்லிம் நபர் மீதும் சந்தேகம் கொள்ள வாய்ப்பை விரித்துள்ளது. அதேவேளை இந்த அவசரகால சட்டம் முஸ்லிம்களுக்கு மட்டும் எதிராகப் பாயக்கூடியதல்ல. சகல மக்களுக்கும் எதிராகவும் துஷ்பிரயோகம் செய்யக்கூடியவை. அதை தமிழ் சமூகம் இதற்கு முன்னர் அனுபவித்துள்ளது.

இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் கடற்கரைகளில் சோடியாக காதல்புரிபவர்களை கைதுசெய்வதற்கு சட்டம் இருக்கிறது. சிறுகதைகளை எழுதுபவர்களைக் கூட தண்டிக்க சட்ட விதிகள் இருக்கின்றன. தேங்காய் மூன்றைத் திருடிய சிறுவனைக் சிறையில் அடைக்கவும் நீதி அனுமதித்திருக்கிறது. தேவையேற்படும் போதெல்லாம் சமூக வலைத்தளங்களைத் தடை செய்யவும் சட்டம் இடமளிக்கிறது. ஆனால் இன்றைய இந்த நிலைமைக்கு பிரதான காரணியான ISIS, NTJ போன்ற இயக்கங்களைத் தடை செய்ய சட்டத்தில் இடமில்லை என்கிறது அரசு.

ஈஸ்டர் படுகொலைகளுக்குப் பின்; கண்களைத் தவிர அனைத்தையும் மூடிக்கொண்டு போகும் ஆடைகளைப் பயன்படுத்தித் தான் பல நாசகார சட்டவிரோத ஆயுதங்களையும், சட்ட விரோத போதைப்பொருள்களையும் கடத்தி வந்தார்கள் என்கிற பேரினவாத பிரசாரம் வலிமை பெற்றிருக்கிறது. இப்படி அணிந்தவர்களால் எந்த பேராபத்தும் எப்போதும் நிகழக்கூடும் என்கிற பிரசாரம் வலுத்திருந்தது. பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பு கமராக்களில் இருந்து புர்கா அணிந்தவர்கள் மாத்திரம் தப்பித்து வருவதை அவர்கள் சுட்டிக்காட்டிக்கொண்டே இருந்தார்கள். நாளடைவில் பாதுகாப்பு தரப்பும் இந்த வாதங்களை முன்வைக்கத் தவறவில்லை. எனவே பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்தத் தடையைக் கொண்டு வருவது அவர்களுக்கு சாத்தியமாயிற்று. பேரினவாதத்தின் நீண்டகால கோரிக்கை இலகுவாக கைகூடியிருக்கிறது.

### கன்னியாஸ்திரிகளுக்கும் தடை?

முஸ்லிம் பெண்கள் முகம் தலை, காது என்பவற்றை மறைக்கும் வெவ்வேறு வடிவங்கள் உலகெங்கும் கைகொள்ளப்படுகின்றன. ஷய்லா, ஹிஜாப், அல்-அமிரா கில்மர், சதூர், நிக்காப், புர்கா, இதில் அனைத்துமே அடிப்படையில் தலை, காது என்பன மூடப்பட்டிருக்கும். இப்போது நடைமுறைக்கு வந்துள்ள தடையானது புர்காவுக்கு மட்டுமல்ல இந்த அத்தனைக்கும் தான். இந்தத் தடையில் எங்குமே மேற்படி வடிவங்களில் எவை



என்பது பற்றி நேரடியாக எதையும் குறிப்பிடாதபோதும் இஸ்லாமிய பெண்கள் அணியும் மேற்படி அனைத்து வகை வடிவங்களும் தடைக்குள்ளாகியுள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல இந்த விதிகளின் பிரகாரம் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளின் தலையை மறைக்கும் சீருடைகளுக்களும் தன்னியல்பாக உள்ளடங்குகின்றன. ஏனென்றால் அவர்களும் தலையுடன் சேர்த்து காதையும் மறைக்கும் சீருடையைத் தான் அணிகிறார்கள்.

இதற்கிடையில் "இலங்கை மோட்டார் சைக்கில் சங்கம்" ஏப்ரல் 30 அன்று விடுத்த ஊடக அறிக்கையில் புதிய விதிமுறை ஏற்படுத்தியிருக்கிற தரப்படுத்தலின் பிரகாரம் முகத்தையும் காதையும் சேர்த்து மறைக்கும் மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தை அணிவது அவசரகால சட்டத்தின்படி தடையாக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது. அந்த அமைப்பின் தலைவர் வீரரத்ன அமரசிங்க இவ்வறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அனுப்பியிருக்கிறார்.

### புர்கா பீதியின் பிதாமகர்கள்

முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாத




சக்திகளின் பிரபலமான முழக்கங்களில் ஒன்று இந்த புர்காவைத் தடை செய்வது. பொது பல சேனா ஆரம்பித்ததிலிருந்து இந்த முழக்கத்தை சமூகமயப்படுத்தியிருந்தார்கள். புர்காவுக்கு எதிரான சித்தாந்தத்தை வளர்த்தெடுத்தவர்கள் அவர்களே. சகல சிங்கள பௌத்த இனவாத அமைப்புகளும் அதன்பின்னர் அந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வந்தார்கள். ஞானசார தேரரும், அன்றைய போதுபல சேனா தலைவர் கிரம விமலஜோதி தேரரும் தொடர்ச்சியாக கூட்டங்கள், ஊடக மாநாடுகளை நடத்தி வந்தார்கள்.

கடந்த 7 ஆண்டுகளுக்கும் மாத்திரம் புர்கா அணிந்த பெண்கள் மீது பொது இடங்களில் நிகழ்ந்த தாக்குதல்கள், இம்சைகள் என்பன ஊடகங்களில் ஏராளமாக பதிவாகியிருகின்றன. மார்ச் 17அன்று கண்டியிலும், மார்ச் 24 அன்று பாணந்துறையிலும் பெரும் ஹிஜாப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தது. அதே மார்ச் மாதம் 31ஆம் திகதி கொழும்பு, (வைட் பார்க் மைதானம்) களனி, பண்ணல ஆகிய இடங்களில் ஹிஜாபுக்கு எதிராக பொதுக்கூட்டங்களையும் நடத்தியிருந்தது.

புர்கா, நிகாப் என்பவற்றைத் தடைசெய்யும்படி பொதுபல சேனாவின் செயலாளர் டிலந்த விதானகே 2013 ஆம் ஆண்டு அன்றைய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவற்றைத் தடைசெய்யக் கோரி இணையத்தளத்தில் ஒன்லைன் கையெழுத்து சேகரிப்பையும் நடத்தினார்கள்.

இதே காலத்தில் "பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக ஆகியிருக்கும் புர்காவை தடைசெய்வேன்" என்று "சிங்கள ராவய" இயக்கத்திடம் அன்றைய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கூறியதாக செய்திகளும் வெளியாகியிருந்தன.

சில முஸ்லிம் அல்லாத பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்களையும், முஸ்லிம் ஆசிரியர்களையும் பர்தா, ஹிஜாப் போன்றவற்றுடன் வரவேண்டாம் என்கிற பிரச்சினைகள் எழுந்திருந்ததையும் நாமறிவோம். குறிப்பாக திருகோணமலை ஷண்முகா இந்துக் மகளிர் கல்லூரி, பதுளை கேகாலை இன்னும் பல இடங்களிலும் பாடசாலைகள் ஹிஜாப் அணிந்து வந்த ஆசிரியர்களை முஸ்லிம் பாடசாலைகளுக்கு மாற்றம் கேட்டு போகுமாறு கூறிய செய்திகள் சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருந்ததையும் நாமறிவோம்.

### கோனி பில்லா

புர்கா பற்றிய அதிபீதியை உருவாக்கும் வகையில் இதற்கு "கோனி பில்லா"

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# 1942இல், இலங்கையில் 'முதலாவது' உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்!



சுப்ரமணியம் மகாலிங்கசிவம்



யப்பானிய பேரரசர் அகிஹிற்ரோ பதவி துறந்திருக்கிறார். 85 வயதான அவர், 30 ஆண்டுகள் பதவியிலிருந்தார். முதுமையும், உடல் நலமின்மையும் காரணமாக, தனது கடமைகளைத் தன்னால் சரிவர ஆற்றமுடியவில்லை என்று தெரிவித்து, அதற்காக பதவியிலிருந்து விலகுவதற்கான அனுமதியைப் பெற்று, அவர் வைபவ ரீதியாக இன்று பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக, இப்படி தாமாகவே பதவியிலிருந்து விலகிய முதலாவது மன்னராக, அகிஹிற்ரோவின் இப்பதவிதுறப்பு வைபவம் யப்பானில் வரலாறு சமைக்கிறது. அவரது மூத்த புதல்வரான முடிக்குரிய இளவரசர் நருஹிற்ரோ சிம்மாசனத்தில் அமர்கிறார்.

அரசியல் அதிகாரம் எதனையும் கொண்டிராத, ஒரு தேசிய சின்னமாகவே யப்பானின் முடியாட்சி விளங்குகின்றது. எனினும், அதில் மக்களின் பேரபிமானத்தை பெரிதும் வென்றவராக மன்னர் அகிஹிற்ரோ திகழ்ந்தார். அவர் மன்னராகுமுன்னர், இளவரசராக இலங்கை வந்திருந்தார்.

1981இல், ஜே. ஆர். ஜயவர்த்தன ஆட்சிக் காலம். யப்பானின் முடிக்குரிய இளவரசரின் வருகையின்போது, 'ஈழநாடு' பத்திரிகைக்காக அவருடன் கைலாகு கொடுத்து, அவரின் இலங்கை விஜயம் முவதிலும் அவரைத் தொடர்ந்தமை நினைவில் எழுந்தாலும், பல பின்னணி சம்பவங்களும், இப்போதைய காலகட்டமும் இன்னமும் முக்கியமானவையாக வரலாற்றுடன் நினைவில் பதிவாகின்றன.

இப்போது நடைபெற்ற 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல்' இலங்கையை மாத்திரமன்றி, உலகையும் திகைப்புக்குள்ளாக்கியிருக்கிறது. முஸ்லிம் தீவிரவாதமாக அடையாளப்படுத்தப்பட்டு, சர்வதேச அரங்கில் அறியப்படுகிறது. இது, இலங்கையில் நடைபெற்ற 'இரண்டாவது' 'ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்'.

யப்பான் பேரரசரின் பதவிதுறப்புத்தான் இதனை இப்போது நினைவில் கொணரவைத்தது. இலங்கை மீது அந்த முதலாவது 'ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்', இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, யப்பானால் நிகழ்த்தப்பட்டது. பலத்த படை இழப்புக்களும், உயிரிழப்புக்களுமான அந்த வான் தாக்குதல், 1942 ஏப்ரல் 5, ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் நிகழ்ந்தது.

சிங்கப்பூர் வீழ்ச்சியுற்று, கடல் பலத்தையும் பிரிட்டன் பெருமளவில் இழந்த நிலையில், இலங்கையில் நிலைகொண்டிருந்த பிரிட்டனின் கிழக்கிந்திய படையணி சோர்வுநிலையிலிருந்தது. அத்தருணத்தில், இலங்கையின் தென்புறமாக, 200 மைல் தொலைவில் நகர்ந்த யப்பானிய விமானந் தாங்கிக் கப்பல்களிலிருந்து புறப்பட்ட சுமார் நூறு போர் விமானங்களின் தாக்குதல், கொழும்பில் அந்த ஈஸ்டர் ஞாயிறு தினம் காலை 7.30 மணிக்கு ஆரம்பித்தது.

நான்கு மாதங்களுக்கு முன்னர், 1941 டிசம்பர் 7 ஞாயிற்றுக்கிழமை, ஹாவாய் தீவின் 'முத்து துறைமுக' (Pearl Harbour) தாக்குதலில் அமெரிக்காவுக்கு பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியிருந்த அதே விமானப் படைத் தலைவரின் தலைமையில், இக் கொழும்பு தாக்குதல் நடைபெற்றது.

இப்போது போலவே, அப்போதும் தாக்குதல் குறித்து கிழக்கிந்திய படையணிக்கு முதல்நாளில் தகவல் கிடைத்தது. எனினும், பெருமளவு படைகள் மாலைதீவிலேயே நிலைகொண்டிருந்தன. கப்பல் தளங்களிலும் விமான தளங்களிலும் இலக்குவைக்கப்பட்ட இத் தாக்குதல்களில், பிரிட்டிஷ் படையணிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல்களும் நிகழ்ந்தன.

தாக்குதல் ஆரம்பித்த வேளையில் பொரளை, புனித லூக் தேவாலயத்தில் ஈஸ்டர் ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருந்தது. உள்ளூரவர்களும் இராணுவ உத்தியோகத்தர்களுமாக தேவாலயம் நிரம்பியிருந்தது.

கொலன்னாவை எண்ணெய்க் குதங்கள் என்று, தப்பாக இலக்கு வைத்ததில், அங்கொடை மனநோயாளர் மருத்துவ நிலையம் குண்டுத் தாக்குதலுக்குள்ளானது.

அரைமணிநேரம் நீடித்த யப்பானிய விமான குண்டுவீச்சில் யப்பானிய விமானங்கள் சில கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

நான்கு தினங்களின் பின்னர் திருகோணமலை துறைமுகமும் யப்பானிய விமானங்களின் தாக்குதலுக்குள்ளானது. சீனன்குடா விமான தளத்துக்கு அருகாக, எண்ணெய்த் தாங்கிகள்மீது, ஒரு தற்கொலைத் தாக்குதலாகவே யப்பானிய விமானமொன்று மூன்று விமானிகளுடன் மோதி எரிந்தது. எழுநூறு பேர் வரையில் உயிரிழந்தனர். ஏழு தினங்கள்வரை தீ எரிந்துகொண்டிருந்தது.

'இலங்கையையும் அதன் கடற்படைத் தளங்களையும் நோக்கி, யப்பானிய படையணி முன்னேற ஆரம்பித்தமை, யுத்தத்தின் ஆபத்தான ஒரு தருணமும், எனக்கு வெகுவாக எச்சரிக்கையூட்டிய ஒன்றுமாகும்' என்று, பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில் இவ்வேளையில் தெரிவித்தார்.

பொதுநல நாடுகளில் யுத்த முயற்சிகளைத் தகர்ப்பதும், கிழக்கிந்திய படையணியை ஆசிய பிராந்திய கடற்பரப்பிலிருந்து வெளியேறவைப்பதும் யப்பானின் நோக்கமாகவிருந்தது. இலங்கையில் அப்போது, அதற்கு ஆதரவான ஒரு போக்கும் ஒரு தரப்பில் இருந்தது. பிரிட்டன் மீதான ஓர் அதிருப்தி பரவ ஆரம்பித்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தில் அங்கம்வகித்த இளம் உறுப்பினர்களான ஜே. ஆர். ஜயவர்த்தனவும் டட்லி சேனநாயக்கவும் பிரிட்டிஷாரை வெளியேற்றுவதற்கான கூட்டு முயற்சிகளில், அப்போது யப்பானுடன் பேச்சுக்களை நடாத்தினார்கள்.

யுத்தம் முடிந்த பின்னர், உலக நாடுகளுடன் யப்பானை மீள இணைத்துக்கொள்ளும் 'சன்பிரான்சிஸ்கோ உடன்படிக்கை'யில் ஜே. ஆர். ஜயவர்தன மிக முக்கிய பங்காற்றினார்.

சன்பிரான்சிஸ்கோவில், 1951 செப்ரெம்பர் 8ஆம் தேதி அந்த உடன்படிக்கை கைச்சாத்தானபோது, இலங்கையின் நிதி அமைச்சராகவிருந்த அவர், 'அன்புதான் உலக மகா சக்தி' என்ற புத்தரின் போதனையைச் சாற்றி எடுத்த நடவடிக்கைகளும், ஆற்றிய உரையும் பிரசித்தமானது.

இரு நாடுகளுக்குமிடையே ஜே. ஆர். மூலமான இந்த நட்பின் அடையாளமே, ஜே. ஆர். ஜயவர்தன ஜனாதிபதியாகவிருந்தபோது, 1982 பெப்ரவரி 15ஆம் தேதி, யப்பானிய மக்களால் இலங்கை மக்களுக்கு அளிக்கப்பட்ட 'ரூபவாஹினி' தொலைக்காட்சி சேவை.

ஜயவர்த்தனபுரவில் அமைந்த புதிய பாராளுமன்ற கட்டமும் இத்தகைய ஒரு வெளிப்பாடானதேதான்.



NELSON COLLEGE LONDON

# Now Enrolling

NCL
NELSON COLLEGE LONDON

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033
Hospitality Management:
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management
- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

அரங்கம்
செய்திகள்

அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!

கால்பக்கம் – ரூபா 2500
அரைப்பக்கம் – ரூபா 5000
முழுப்பக்கம் – ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் – ரூபா 200
மாத்திரமே

# பாடசாலை பாதுகாப்புக்கான புதிய நியமங்கள் குறித்த கரிசனையும் மாற்று யோசனைகளும்



எமது நாட்டில் நடாத்தப்பட்ட சில வன்முறைச் சம்பவங்களால் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பின் பொருட்டு, பாடசாலை பாதுகாப்புச்சபையினால் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

இவை எதிர்வரும் திங்கள் கிழமையிலிருந்து (06.05.2019) நடைமுறைப்படுத்தப்படும். அதேவேளை மறுஅறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும். மாணவர்கள், பெற்றோர்கள் இவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

01. பாடசாலை வாயிலில் சகல மாணவர்களினதும் பக்கப்பைகள்




ஆசிரியர்களால் சோதிக்கப்படும். ஆகவே பாடசாலைக்கு வரும் போது அநாவசியமான, சந்தேகத்திற்கு இடமான மேலதிகமான பொருட்கள் எதனையும் கொண்டு வர வேண்டாம்.

02. பாடசாலையை பிரதிநிதித்து வப்படுத்தும் கழுத்துப்பட்டி, சின்னம் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அணியாதவர்கள் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

03. உயர்தர மாணவர்கள் தேசிய அடையாள அட்டையை கண்டிப்பாக பாடசாலைக்கு கொண்டுவருதல் வேண்டும்.

04. பாடசாலையின் சகல வாயில்களும் சரியாக 7.30 மணிக்கு மூடப்படும், அதன்பின் எந்த மாணவர்களும், ஆசிரியர்களும் உட்செல்லவும், வெளிச்செல்லவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மீண்டும் 1.30 மணிக்கே வாயில்கள் திறக்கப்படும்.

05. பெற்றோர், பாதுகாவலர், உறவினர்கள் யாரும் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

06. 7.30 மணிக்கு பின்னர் பாடசாலைக்குள் நுழைய விரும்பும் பெற்றோர் வாசலில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் குறித்த தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு அனுமதி பெற்றபின்னரே வாயில் திறக்கப்படும். அப்போதும் எவ்வித பயணப்பொதிகளுடனும் யாரும் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. பெற்றோர் கூட்டங்களுக்கு அழைக்கப்படும் பெற்றோர் குறித்த நேரத்திற்குள் வருகை தர வேண்டும். பின்னர் வாயில் கதவு திறக்கப்பட மாட்டாது. அப்போதும் எவ்வித பயண பொதிகளும் யாருடனும் அனுமதிக்கப்படாது.

08. ஆரம்பப்பிரிவு மாணவர்களை அழைத்துச்செல்லும் பெற்றோர் , தாமதங்களை தவிர்த்து உரிய நேரத்திற்கு அழைத்துச்செல்லவும்.

09. பாடசாலையினுள் சந்தேகத்திற்கு இடமான பொருட்களையோ நபர்களையோ கண்டால் உரிய ஆசிரியர்களிடம் அறியத்தருவது மாணவர்களின் கடமையாகும்.

10. மறு அறிவித்தல் வரை, பாடசாலையில் நடைபெறும் மேலதிக வகுப்புக்கள், விளையாட்டு பயிற்சிகள் போன்றவை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

11. பாடசாலை நிறைவடைந்தாலும் மாலை நேர விளையாட்டுக்களில் பாடசாலை மைதானத்தினுள் விளையாடுவது, நுழைவது அனைவருக்கும் மறுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பாடசாலை நிர்வாகம் அனைவரையும் கோருகின்றது.

## பாடசாலை பாதுகாப்பு தொடர்பில் பொருத்தமான சில மாற்று உபாயங்கள்.

கடந்த 21ம் திகதி 'உயிர்த்த தின' குண்டு வெடிப்புக்கு பின்னரான இலங்கைத்தீவில் பாதுகாப்பு விடயங்கள், ஊரடங்கு உத்தரவு, பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால சட்டம், திடீர் சுற்றிவளைப்புக்கள், கைதுகள், குறிப்பிட்ட ஒரு இனத்தவர் மீதான காழ்ப்புணர்வு, அதிக சோதனைகள், சுதந்திரமாக நடமாட, ஒன்றுகூட, சந்தோசமான நிகழ்வுகளை செய்ய முடியாத சூழ்நிலை என எமது நாடு மீண்டும் ஒரு பயங்கரமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஓடி விளையாடி அகமகிழ்ந்து களிப்புடன் இருக்க வேண்டிய சிறுவர்கள், பயம், பதற்றம், வன்முறை, குண்டு வெடிப்பு, அதன் பின்னரான நிகழ்வுகள் குறித்த அச்சத்துடன் எதிர்வரும் 6ம் திகதி பாடசாலை ஆரம்பிக்கும் நாளில் முன்னெப்போதும் இல்லாத ஒரு சூழ்நிலையில் பாடசாலைக்குள் அடியெடுத்து வைக்கப் போகிறார்கள். நாட்டின் தேசிய பாதுகாப்பு, பயங்கரவாத அச்சுறுத்தல்கள் குறித்து நாம் எல்லோரும் கூடிய அக்கறையுடனும், விழிப்புடனும் இருந்து பாதுகாப்பு படையினருக்கு உதவி செய்து இந்த சூழ்நிலையை விரைவில் சமூக நிலைக்கு கொண்டு வருவதற்கு உதவுவது எமது தலையாய கடமை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். பாடசாலை பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை பாதுகாப்புச்சபை எடுத்த சில முடிவுகளில் மாற்று பொறிமுறைகளை குறித்து கலந்துரையாடி சாதகமான, நடைமுறைக்கு பொருத்தமான விடயங்களை பயன்படுத்துவது மாணவர்களுக்கும், அதன் ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவில் விரிசல், சந்தேகங்கள், கோபம் பழிவாங்கும் உணர்வுகளை தவிர்க்க உதவும்.

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

1. பாடசாலை ஆரம்ப நாட்களில் மாணவர்கள் புத்தகப்பை ஏதும் இல்லாமல் கையில் எடுத்துவரக்கூடிய கொப்பிகளை மட்டும் கொண்டுவருவது. இது புத்தகப்பைகளை சோதனை செய்வதை தவிர்க்க உதவும். உசாத்துணை புத்தகங்களை வகுப்பிலேயே வைக்கவிடுதல் அல்லது வீடுகளில் வைத்து வருதல்.



2 . பாடசாலையை சுற்றி சிசிடிவி கமறாக்களை உள், வெளி பகுதிகளில் பொருத்தி 24 மணிநேர கண்காணிப்பை உறுதிப்படுத்துவது. இதற்கு பெற்றோர்களின் நிதிப் பங்களிப்பை பெறுவது, நிபுணத்துவ ஆலோசனை வழிகாட்டல்களை பாடசாலை சமூகம் பெற வேண்டும்.

3. சுழற்சி முறையில் பெற்றோர்கள் பாடசாலை ஆரம்பமாகி முடியும்வரை வெளிப்புற பாதுகாப்பில் ஈடுபடுவது.

4. உடனடியாக வகுப்பறை கற்பித்தலை ஆரம்பிக்காமல் மாணவர்கள் சகமாணவர்களுடன் கருத்துரையாடி, ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதற்கு இடமளித்தல்.

5. ஆசிரியர்கள் நாட்டின் தற்போதய நிலமை, பயங்கரவாதம், குண்டு வெடிப்பு, உயிரிழப்பு, காயங்கள், தற்காப்பு முறைகள், செய்யக்கூடிய, செய்யத்தகாத விடயங்கள்




போன்றவற்றை மாணவர்களின் கேள்விகள், ஆதங்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் கலந்துரையாடுவது.

6. குற்றச் செயல்கள், குறிப்பிட்ட நபர்கள் சார்ந்தது அன்றி அது ஒரு சமூகம், மதப்பிரிவினை சார்ந்தது அல்ல. எனவே தங்களுடன் படிக்கும் 'இஸ்லாம்' சகோதரர்களுடன் தொடர்ந்தும் நட்புடன் பழக வேண்டும். அதற்கான செயற்பாடுகளை செய்து காட்டுவது.

7. விளையாட்டு முற்றத்தில் வகுப்பு ரீதியாக நன்றாக விளையாட விடுங்கள்.

8. பாடசாலை வாயில்களை மூடினால், அவசர நிலைமைகளில் எவ்வாறு பிள்ளைகளை வெளியேற்றுவது?. மறுதலையாக புதிய வாயில்களை (Emergency Exit Gates) உருவாக்குதல்.

9. பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தை 7.30 – 8.00 மணிவரை நீடிப்பது தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்கள் இராணுவ சோதனைகள், சோதனை சாவடிகளை கடந்தே வர வேண்டும்



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-04*

சென்ற இதழில் மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத்தின் செயற்பாடுகளில் ஒன்றான கண்ணதாசனின் வருகையைப் பற்றி தந்திருந்தேன். அடுத்து, பாரதி, தமிழ்முரசு, தமிழன்குரல், கிராமணிகுளம், செங்கோல், தமிழ்நாடு எனப்பல பத்திரிகைகளைத் தந்தவரும் தென்னகத்து, சொல்லின் செல்வர், சிலம்புச் செல்வர், தமிழ்க்காவலர், சிவஞானக்கனி, பத்மஸ்ரீ, கலைமாமணி, டாக்டர் போன்ற விருதுகளைப் பெற்றவரும் 150 நூல்களை எழுதியவருமான ம.பொ.சிவஞானம் அவர்களின் வருகையைப் பற்றி ஆராய்வோம்.



ம.பொ.சிவஞானம்

கண்ணதாசனை அழைத்த அதே ஆண்டு 1955ல் ம.பொ.சிவஞானம் அவர்களையும் மட்டு/தமிழ் வாலிபர் சங்கம் மட்டக்களப்புக்கு அழைத்திருந்தது. சிலப்பதிகாரத்தின் மீது கொண்டிருந்த ஆளுமையின் காரணமாகவே இவர் சிலம்புச்செல்வர் என அழைக்கப்பட்டார். இவர் மட்டக்களப்புக்கு வருகைதந்து, இலக்கிய விழாவொன்றில் பங்குபற்றியதோடு இராஜதுரையவர்களின் இல்லத்தில் அச்சங்கத்தின் அங்கத்தவர்களான அன்றைய இளைஞர்களோடு விருந்துண்டும் மகிழ்ந்தார்.

அம்மறக்க முடியாத சம்பவத்தை ம.பொ.சி அவர்கள், பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார். அன்பர் இராஜதுரை, அடக்கமாகப் பணிபுரிவதில் ஆர்வம் உடையவர். ஆடம்பரத்தை விரும்பாதவர். எந்தச்சோதனைகளையும் துணிவோடு சந்திக்கக் கூடியவர். இப்போது அவர் அமைச்சர் பதவியில் இருப்பதும் பல சோதனைகள் சூழ்ந்த நிலையில்தான். தமிழுக்கும், தமிழருக்குரிய பண்பாட்டையும், வீரத்தையும் அவர்பால் காணும் போதேல்லாம் நான் மகிழ்ச்சியடைவதுண்டு. அவரால் அழைக்கப்பெற்று மட்டக்களப்பில் ஒரு இலக்கிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியதும் உண்டு. அவரது இல்லத்தில் விருந்து அருந்தி மகிழ்ந்ததுமுண்டு.

அமைச்சர் திரு. இராஜதுரை, இலங்கை நாடாளுமன்றத்தில் சாதாரண உறுப்பினராக இருந்த காலம்தொட்டு, அவரை நான் அறிவேன். ஒரே தொகுதியில் தொடர்ந்து 33 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருவர் அடுத்தடுத்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது எனக்கு நினைவிலுள்ளபடி இந்தியத் தமிழகத்தில் நிகழாத அற்புதமாகும்! சிறந்த நாவன்மையுடைய பேச்சாளர், பொருட்செறிவோடு எழுதும் திறமைமிக்க எழுத்தாளர். பிறரோடு பழகுவதிலும் சிறந்த பண்புடையவர். இத்தகைய நற்குணங்களும் பொருந்திய அன்பர் இராஜதுரை இந்தியா வரும்போதெல்லாம், என்னைச் சந்திக்காமல் இருப்பதில்லை. அவருடன் உரையாடும் போதெல்லாம், ஒரு உண்மையான தமிழருடன் உரையாடுகிறோம் என்ற உணர்வு எனக்கு ஏற்படுவதுண்டு.

முதிர்ந்த அரசியல்வாதியும் தமிழ்நாட்டில் செவாலியர் சிவாஜி தெருவில் சிலைவைத்துப் போற்றப்படுகின்ற தமிழகத்து மக்களின் இதயங்களில் வீற்றிருக்கின்ற தமிழ்க்காவலர் ம.பொ. சிவஞானம் அவர்கள் இராஜதுரையைப் புகழ்ந்து மேற்கண்டவாறு பாராட்ட இராஜதுரையை ஈன்றெடுத்த தேனகம் கொடுத்து வைத்திருக்கிறது. அடுத்து நெடுஞ்செழியன் வரவு.



நெடுஞ்செழியன்

நெடுஞ்செழியன் அவர்களை இராஜதுரை அவர்கள் மேற்படி காலங்களிலேயே அன்போடு அழைத்து மட்டக்களப்பு நகர மண்டபத்தில் பிரமாண்டமான வரவேற்பு விழாவொன்றை, மட்டக்களப்பு தமிழ்வாலிபர் சங்கம் மூலம் ஒழுங்கு செய்திருந்தார். அவ்விழாவுக்கு தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகரான செல்வநாயகமும் அழைக்கப்பட்டிருந்தார். அவ்விழாவில் அவர் கலந்து உரையாற்றியது விழாவை மேலும் மெருகூட்டியது.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். பிற்காலத்தில் சி.என்.அண்ணாதுரை, எம்.கருணாநிதி, எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா ஆகிய நான்கு முதலமைச்சர்கள் இருந்த காலகட்டங்களில் தமிழக சட்டசபையில் நிதியமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் இக்கட்டான சூழ்நிலைகளில் இருதடவைகள் பதில் முதலமைச்சராகவும் பணியாற்றியும் இருந்தார். 1955ல் இருந்து 1961 வரை திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி.மு.க) பொதுச்செயலாளராகவும் இருந்தவர்.

இவைகளை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால்; தேனகச்செம்மல் இராஜதுரையவர்கள் இவர்களோடெல்லாம் அன்பு செலுத்தி நம் மட்டுமாநகருக்கு இவர்களை வரவழைத்து, கௌரவித்து நம் தேனகத்துக்கு பெருமை தேடித்தந்து, சாதனை படைத்தவர் என்பதற்காகவே. திரு.இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கும் திரு.செ.இராஜதுரையவர்களுக்கும் இருந்த தொடர்பு இத்தோடு முற்றுப்பெறவில்லை. 1981ல் இராஜதுரையவர்களால் கொழும்பு மாநகரில் பாரதியார் நூற்றாண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அவ்விழாவில் உரையாற்ற திரு.இரா. நெடுஞ்செழியனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வழைப்பையேற்று நாவலர் நெடுஞ்செழியன் உரையாற்றியதோடு, கொழும்பு தமிழ்ச்சங்கக் கூட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியிருந்தார்.

அதே வேளை, திரு.இரா.நெடுஞ்செழியனும் திரு.செ.இராஜதுரை அவர்களை தமிழகத்தில் நடைபெற்ற இரு தமிழாராய்ச்சி மாநாடுகளில் சிறப்புரையாற்ற வருகை தருமாறு தமிழக அரசின் சார்பில் அழைப்புவிட அம்மாநாடுகளில் பங்கு கொண்டு மிகச்சிறப்பான உரைகளை தந்து நம் மண்ணுக்கு பெருமை தேடித்தந்தவர் நம் தேனகச்செம்மல் இராஜதுரை. அம்மாநாடுகள் முறையே 1968ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ்மாநாடு, 1981ல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு என்பவைகளே.

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

இராஜதுரையைப் பற்றி நெடுஞ்செழியன் கூறியது; திரு.இராஜதுரை தமிழகத்திற்கு வரும் போதெல்லாம், அவரோடு கலந்து உரையாடி மகிழும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். இவர் இனிய பண்புகள் பலவற்றிற்கும் உறைவிடமாக விளங்குபவர். இவர் சிந்தனை அறிவுத்திறன், செயலாற்றல்திறன், சிறந்த பண்பாட்டுத்திறன், செம்மையாகச் செய்து முடிக்கும் திறன், போன்றவற்றை ஒருங்கே பெற்றவர். இவர் சிறந்த பேச்சாளர், நல்ல எழுத்தாளர், எவருடனும் பழகக் கூடிய இயல்பினைக் கொண்டவர்.

இவர் சமூகத்தொண்டு, தமிழ்த்தொண்டு, சமயத்தொண்டு, அரசியல்தொண்டு, ஆட்சித்தொண்டு, பொதுத்தொண்டு போன்றவற்றில் தலை சிறந்து விளங்குபவர்.

இவரின் இச்சீரிய தொண்டுகள் தொடர இவர் பல்லாண்டுகாலம் நலம் பெற்று வாழ்க! இவ்வாறு இவர் தன் எண்ணப்பதிவை தந்திருந்தார். இனிவரும் இதழில் காந்திஜீ சேவா சங்கத்தின் செயற்பாடுகளை பார்ப்போம். (தொடரும்)

# சொல்லத் துணிந்தேன்! 06

மட்டக்களப்பு பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கடந்த வருடம் (30/11/2018) கொலை செய்தவர்கள் யாரென்று (இஸ்லாமிய அடிப்படைவாதத் தீவிரவாதிகள்) தற்போது கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலும், இது பொதுமக்களுக்கும் பாதுகாப்பு அமைச்சகத்துக்கும் தெரியவந்துள்ள போதிலும் வவுணதீவு சம்பவத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

அந்த முன்னாள் போராளி விரைவில் விடுவிக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் வலியுறுத்தி ஊடகங்களுக்கு கருத்துக் கூறியு ள்ளதாக அச்சு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் கூறியுள்ளதாக மின்னூடகம் ஒன்று ம் கூறியுள்ளது.



இந்த விடயம் குறித்து மேற்படி முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு கருத்துக் கூறியுள்ளமை தவறல்ல. இதனைச் சுட்டிக்காட்டியுள்ளமை பொருத்தமானதே. காலமறிந்த கருத்துத்தான்.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்தில் உள்ளவர்களின் வழமையான பாணி என்னவெனில், ஊடகங்களுக்கு கருத்துக் கூறுவதோடு அல்லது ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதோடு மட்டும் தங்களது செயற்பாடுகளை நிறுத்திக்கொள்வது. காரணம் தேர்தல் அரசியலுக்கான விளம்பரம் தேடுவது மட்டுமே அவர்களது நோக்கமாக இருப்பது.

அறிக்கை அரசியலைவிடச் செயற்பாட்டு அரசியலையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். செயற்பாட்டு அரசியல்தான் மக்களுக்கு பயன்தரக்கூடியது.

அமைச்சின் உயர் அதிகாரிகளுடனும் சட்டமா அதிபர் திணைக்கள உயர் அதிகாரிகளுடனும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுடனும் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்தி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அரியநேந்திரனால் குறிப்பிடப்பட்டுள்ள கன்னன்குடா கரையாக்கன்தீவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கதிர்காமத்தம்பி அஜந்தன் என்பவரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பாதிக்கப்பட்ட நிரபராதிக்கு உரிய நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கும் மிகத்துரிதமாகச் செயற்பட வேண்டும்.

இதனைச் செய்வதற்கான ஆளுமையும் ஆற்றலும் செல்வாக்கும் இவர்களுக்கு இல்லையாயின் இவர்கள் சார்ந்த அரசியல் கூட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் இப்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்திலும் பிரதமர் இடத்திலும் மிகுந்த செல்வாக்குப் பெற்ற பிரமுகராக விளங்கும் சுமந்திரன் பா.உ ஆகியோரின் மூலம் உதவிகளைப் பெற்று இதனைச் சாத்தியப்படுத்தலாம்.

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' ஆக இருந்துவிடக் கூடாது. தமிழர் அரசியலில் 'சிலுசிலுப்பு'த்தான் அதிகம்.

பலகாரம் குறைவு. இனிவரும் காலங்களிலாவது இதனை மாற்றி அமைக்க வேண்டும். இதன் அடையாளமாக மேற்படி விடயத்தை மேற்படி முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இணைந்து வென்று காட்டுங்கள். அப்போது உங்கள் இருவருக்கும் 'ஜே' போடலாம்.

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 2



## பாரிய நெருக்கீட்டு அனுபவங்கள்

மனிதர்களால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்களான பயங்கரவாத தாக்குதல்கள், குண்டுவெடிப்பு, உயிரிழப்பு, உடற்காயங்கள், பாலியல் வல்லுறவு, சித்திரவதை, பாரிய வீட்டு வன்முறை, கடுமையான உயிர் அச்சுறுத்தல் போன்ற பல்வேறு சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள் பாரியளவில் உளநெருக்கீடுகளிற்கு உள்ளாகின்றனர். அவ்வாறானவர்களுடன் வேலை செய்யும் போது பின்வரும் விடயங்களில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டு, உயிர்பிழைத்தவருக்கு இன்னும் பாதுகாப்பு பிரச்சினைகள் அத்துடன் கடந்த அனுபவங்கள் மீள தோன்றுவதும் இருக்கலாம். பாதிக்கப்பட்ட சம்பவங்கள் மிக நெருக்கீடு உள்ளவை என்பதால், அந்தச் சம்பவங்களை மீளக் கொணரும் போது கூடியளவில் நெருக்கீடு, பதகளிப்பு என்பன ஏற்படுவதால் அவற்றைப் பற்றி தொடர்ந்து கதைப்பதை தவிர்க்கலாம். இவற்றைப் பற்றி கதைப்பது தனக்கு உயிர் ஆபத்து அல்லது கதை வெளியில் போய்விடும் என்கிற பயமும் இருக்கலாம். சம்பவம் வெளித்தெரிந்தால் ஏற்படும் எதிர்காலம் குறித்த பயமும் அவர்களிடம் காணப்படலாம்.

சம்பவம் ஒன்றினால் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்த நபர், தனது அனுபவங்களைப் பற்றிக் கதைக்கும் போது அவர்களது உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கு பொருத்தமான உடல்மொழி அசைவுகளை காட்டுங்கள். ஒத்துணர்வுடன் ஆர்வமாக செவிமடுங்கள். தற்போது பயனாளி உங்கள் மீது மிகுந்த நம்பிக்கையுடன் தனது பிரச்சினைகளை வெளிக்கொணர்வார். தேவையான இடங்களில் அழவிடுங்கள், கோபத்தை வெளிப்படுத்த, மெதுவாக சுவாசிக்க, தண்ணீர் குடிக்க அனுமதிப்பது அவர்களின் உட்கிடக்கையை வெளிப்படுத்த உதவும். பாலியல் வல்லுறவு, பாலியல் வல்லுறவு முயற்சிகள், பாலியல் நடத்தைகள் போன்ற சம்பவங்களை உங்களது பயனாளிகள் முதல் சந்திப்பிலேயே கதைக்கமாட்டார்கள். அதற்காக நீங்கள் அவசரப்படத்தேவையில்லை. உங்கள் பயனாளியின் சுயகௌரவம், கண்ணியம் குறித்து வெளிப்படையாக இருங்கள். இவ்வாறாக பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்படுத்தும் சம்பவங்கள் மிகமிக நேர்மையாக உங்களிற்குள்ளேயே அவை வைத்திருந்து இரகசியம் காக்கப்படும் என்பதை பயனாளி உணரும்வரை உங்கள் மீதான நம்பிக்கை நல்லவிதமாக அமையும்.

பாலியல் வல்லுறவு (கற்பழிப்பு) போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களிற்கு சமூக, சட்ட, மருத்துவப் பிரச்சினைகளும் இருக்கலாம். அவ்வாறானவர்களிற்கு மேற்படி உதவிகளை பெற்றுக்கொடுக்க, வழிகாட்ட ஆவன செய்யவும். 'பிரச்சினைகளிற்கான முகாமைத்துவம்' என்கின்ற பாரிய உளநெருக்கீடுகளிற்கு உட்பட்டவர்களிற்கான பிரத்தியேகமான ஆற்றுப்படுத்தல், உளநலம் சார்ந்த அனைத்து விடயங்களையும் கொண்டிருக்கப்போவதில்லை. இருந்தபோதும் பொதுவான உதவியளிக்கும் முறைகள் குறித்த கொள்கைகள் கருத்துகள் இதில் அடக்கப்பட்டிருக்கும். அத்துடன் இதன் மூலம் கிடைக்கின்ற அறிவு, அனுபவத்தைக் கொண்டு பணியாளர்கள் பயனாளிக்கு பொருத்தமான உதவியளிக்கும் முறைகள், மேலதிக உதவிக்கு அனுப்ப வேண்டிய அல்லது தொடர்பு கொள்ளக்கூடியவர்கள் குறித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். நடந்த பாரிய சம்பவங்களைப் பற்றி உங்களுடன் உரையாடும் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்த நபர், நடந்த சம்பவத்திற்கு தனது தவறுகளே காரணம் அல்லது அதற்கு உடந்தையாக இருந்தது, எதிர்க்கவில்லை போன்ற குற்றவுணர்வுகளுடன் காணப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயனாளியுடன் மிகப்பொருத்தமான அணுகுமுறைகள் ஊடாக அந்த செயலிற்கு பாதிக்கப்பட்டவர் காரணமில்லை என்பதை உணர்த்த வேண்டும். இவ்வாறான கலந்துரையாடல்களின் போது பயனாளி கூறுகின்ற விடயங்களிற்கு மதிப்பளித்து பொறுமையாக செவிமடுத்து அவரது உட்கிடக்கை முழுவதையும் திறந்து விடுவதற்கு உதவவும். இங்கு இடையீடுகள் ஆரம்பிப்பதற்கு அவசரப்படத்தேவையில்லை.

உங்களது பயனாளி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என நீங்கள் உணரும்போது என்ன செய்வீர்கள்?

உங்களிடம் உதவிக்கு வந்துள்ள பயனாளி குறித்து ஏற்கனவே உங்களது சமூகத்தில் கதைக்கப்படுகின்ற அல்லது உலவுகின்ற செய்திகளைப் பற்றி அறிந்துள்ளீர்கள் எனில், நீங்கள் பயனாளி அவ்வாறாக பாதிக்கப்பட்டுள்ளதான அனுமானத்திற்கு வந்திருப்பீர்கள். இதனால் பயனாளி உங்களுடன் தனது அனுபவத்தை பகிர்வதை தவிர்க்கலாம். நீங்களாக பயனாளி குறித்து எந்த அனுமானத்திற்கும் வருவதை தவிரத்துக் கொள்ளுங்கள். உங்களது மேற்பார்வையாளர்களது ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு தொடர்ந்து பயனாளியுடன் நல்ல உறவுடன் வேலை செய்யுங்கள். மேற்படி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபருடன் உரையாடும் போது அவரிற்கு பாதுகாப்பு கெடுபிடிகள் காணப்படும் இடத்து, இதைக் குறித்து பயனாளியுடன் நல்ல நிலையில் உரையாடுவதுடன் குறிப்பிட்ட காலம்வரை இவ்வாறான பிரச்சினைகள் இல்லாமல் இருக்கக்கூடிய இடங்கள், குறிப்பாக மாவட்ட ரீதியாக உள்ள பாதிக்கப்பட்ட மகளிர் தங்கும் நிலையங்கள் குறித்தும் கலந்துரையாடலாம். அவ்வாறு தேவைப்படும் போது அவற்றை பெற்றுக்கொடுக்க உதவலாம். பாதிக்கப்பட்டவர்களுக்கு கூறும் பதில்கள் அவர்கள் அதனை நல்லவிதமாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். 'நீங்கள் கூறிய உங்கள் பாதிப்பை குறித்து சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.' 'நீங்கள் கூறிய சம்பவம் எவ்விதத்திலும் வெளிவராமல் என்னால் இரகசியம் காக்கப்படும்.' 'நீங்கள் விரும்பும் சந்தர்ப்பத்தில் மட்டும், உங்களது பிரச்சினைகளிற்கான இடையீடுகள் குறித்து எனது மேலாளருடன் உரையாடுவதற்கு கதைக்கப்படும் அல்லது அதுவும் தவிர்க்கப்படும்.' 'உங்களது பாதுகாப்பு நிம்மதியான வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் நான் உங்களிற்கு இடையூறாக இருக்கப்போவதில்லை.' 'உங்களிற்கு நடந்த சம்பவங்களைப் பற்றி வெளிப்படையாக என்னுடன் கதைப்பதற்கான உரிமை உங்களிடம் இருக்கிறது. அதற்காக நான் உங்களை வற்புறுத்தப் போவதில்லை.' 'உங்களிற்கு நடந்த சம்பவம் போன்று பல பெண்கள், ஆண்களிற்கும் நடந்துள்ளது. நீங்கள் மட்டும்தான் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என எண்ணத்தேவையில்லை.' அத்துடன் 'இச்சம்பவம் உங்கள் தவறால் நடக்கவில்லை. நடந்த சம்பவத்தை குறித்து ஒரு போதும் உங்களை தீர்ப்பிடப்போவதில்லை.' இவ்வாறாக உரையாடுவதன் மூலம் உங்கள் பயனாளிக்கு மிகுந்த நம்பிக்கையை கொடுக்க முடியும்.

நீண்டகாலத்திற்கு முன்னர் பாலியல் வல்லுணர்விற்கு உட்பட்டு தற்போது பிறிதொரு பிரச்சினையுடன் வந்துள்ள உங்கள் பயனாளியுடன் தற்போதைய பிரச்சினை குறித்து கதைப்பதற்கே முன்னுரிமை கொடுங்கள். கடந்துபோன பாலியல் வல்லுணர்வு குறித்துக் கதைப்பதற்கு பிறிதொரு சந்தர்ப்பத்தை எடுக்கலாம். அத்துடன் பயனாளி இவ்விடயங்களை உங்களுடன் பயமின்றி பகிர்ந்துகொள்ள முடியும் என்பதையும் உணர்ந்துகொள்ளட்டும். பெயர்கள், நபர்கள், இடங்கள் என்பன தவிர்க்கப்பட்டு சில உதாரணங்களை பயனாளியுடன் கலந்துரையாடலாம். இதன் மூலம் பயனாளி தனது பிரச்சினையை வெளிக்கொணர்வதற்கான சக்தியை பெற்றுக்கொள்வார். உடனடியாக அல்லாவிட்டாலும் காலப்போக்கில், தொடர்ந்து வருகின்ற சந்திப்புக்களில் அவர்கள் உங்களுடன் கதைப்பதற்கு முற்படலாம் இருந்தபோதும் சிலர் தமது பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வதை தவிர்த்தால், அதற்கு மதிப்பளித்து அவ்விடயத்தைப்பற்றி பேசுவதை தவிர்ப்பது மிகப்பொருத்தமானது. இந்த உதாரணத்தை போல தற்போதைய அனர்த்த நெருக்கீட்டு நபர்களிற்க்கு உதவுங்கள்.

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

## முரண்பாடுகள்

சமூகங்களிற்கு இடையில், மதக்குழுக்கள், வெவ்வேறு சாதியப் பிரிவுகள், இளைஞர் குழுக்களிற்கு இடையில் முரண்பாடுகள் தோற்றும்போது அவர்கள் இராணுவம், பொலிஸ், ஆயுத குழுக்கள், எதிர்குழுக்கள் போன்றோர் குறித்த அச்சத்தை வெளிப்படுத்துவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில், சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு உங்களிடம் உதவிநாடி வந்தவர்கள், நீங்கள் யார்? என்ற பயத்தை கொண்டிருக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் யார்? என்பதை சரியாக வெளிப்படுத்துவதுடன் அவர்கள் கூறுகின்ற செய்திகள் இரகசியம் காக்கப்படும் என்பதையும் பயனாளி உணர்வதற்கு உதவுங்கள். நம்பிக்கையை கட்டியெழுப்புதல், அடிப்படை உதவி செய்யும் உபாயங்களை முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்களிற்கு பிரயோகிக்கும் போது ஒத்த பாதிப்பு உள்ள குழுக்களைச் சார்ந்தவர்கள் உதவுவது அவர்களிற்கு பாதுகாப்பாகவும், தங்களது பிரச்சினையை பயமின்றி வெளிக்கொணரவும் உதவும். இதன்போது உங்களது மேற்பார்வையாளரது ஆலோசனைகள், உதவியளிக்கும் முறைகள் என்பன சரிவர பிரயோகிக்கும் முறைகள் என்பவற்றை பாதிக்கப்பட்ட நபர், அவர் சார்ந்த சமூகத்திற்கும் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதையும் கலந்துரையாடலாம்.அனர்த்தங்களின் பின்னர் குறிப்பிட்ட அளவினர் மிதமான, பாரிய உளநலக்கோளாறுகளால் பாதிக்கப்படலாம், அவ்வாறானவர்களை அண்மையில் உள்ள உளநலச்சேவைக்கு அழைத்துச் செல்லுங்கள்

## மட்டக்களப்பில் உளநலச் சேவைகள்

உங்களது உளநலத் தேவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ள பின்வரும் இடங்களை அனுகலாம்.

உளநலத்துறை, போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு. தொலைபேசி : 065 2225656

உளநலத்துறை, ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை.தொலைபேசி : 065 2257721

உளநலத்துறை, ஆதார வைத்தியசாலை, களுவாஞ்சிக்குடி. தொலைபேசி : 065 2250061

உளநலத்துறை, ஆதார வைத்தியசாலை, ஏறாவூர். தொலைபேசி : 065 2257721

உளநலத்துறை ஆதார வைத்தியசாலை, காத்தான்குடி.தொலைபேசி : 065 050555

உளநல புனர்வாழ்வுச் சேவைகள், மாவடிவேம்பு.தொலைபேசி - 065 2241055

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.





## 'அப்பெல்லாம் தளப்பத்துதான் குடை'

'இப்ப கொஞ்ச காலமாகத்தான் நவீன குடையை கண்ட நாங்கள், அப்பெல்லாம் தளப்பத்துதான், குடை' என்கிறார் 68வயது நிரம்பிய தம்பியப்பா பாலசுந்தரம்.

தளப்பத்து தொடர்பில் எத்தனைபேருக்கு தெரியும், இன்றுள்ள 40வயது வயதினை நிரம்பியவர்களுக்கும் தளபத்து தொடர்பில் தெரியவதற்கும் வாய்ப்பில்லை. இதற்கு எமது முன்னோர்களிடம் நாம்பேசுவதற்கு நேரம் ஒதுக்கிக்கொள்ளாமையும் காரணமாகும். நவீனபோக்கினால், எமது மூதாதையர்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்க வேண்டிய பலவிடயங்களை இன்று நாம் இழந்துநிற்கின்றோம்.

படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள விடுதிக்கல் கிராமத்தில் நீண்ட காலமாக வசித்து வருகின்ற தம்பியப்பா பாலசுந்தரத்திடம் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அவரின் வீட்டின் முன் உள்ள மரங்கள் நிறைந்த இடத்தில் இருந்து பேசிக்கொண்டிருக்கையில், தளப்பத்து பற்றிப் பேச ஆரம்பித்தார்.

முதலெல்லாம் மழைக்கும், வெயிலுக்கும் தளப்பத்தைதான் பயன்படுத்தினோம். பெரியபோரதீவு காளி கோயில் உற்சவத்திற்கு போனால், கொண்டுபோகின்ற பணத்திற்கு முதலில் தளப்பத்தைதான் வாங்கி வைத்துக்கொள்ளுவோம். ஏனென்றால் வீட்ட போகும் போது, மழைபிடித்துவிடும் அதற்காக இதனை வாங்கி எடுத்துவிடுவோம் என்கிறார். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே பக்கத்துவிட்டு வீட்டு, எண்பது வயது நிரம்பிய காத்தமுத்துவும், தன்மன் சங்கரப்பிள்ளையும் அவ்விடம் வருகைதந்து அருகே அமர்ந்து கொண்டனர். இவர்களே ஒரு நூலகம், இவர்களிடமிருந்து பலவிடயங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மூவரையும் சந்தித்ததே மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது.

**படுவான் பாலகன்**

காத்தமுத்துவைப் பார்த்து தளப்பத்தை தெரியுமா? என கேட்க, என்ன தம்பி தெரியுமா என்று கேட்கீறிங்க?, எங்கட காலத்து குடை அதுதான் என்கிறார். அவரின் சத்தமும், உற்சாகமும் அவரின் அனுபவத்தினை வெளிப்படுத்தியது. அதேவேளை இப்போதைய இளம்சமுகத்தின் மேல் அவருக்கு கோபமும் உள்ளது. தற்போதைய பிள்ளைகள் சொல்கேட்பது குறைவென்றும், ஒழுக்கத்தில் சீர்கெட்டு செல்கின்றனர் என்றும் கூறுகின்றார். இது, இவ்வாறு இருக்க தளப்பத்து தொடர்பிலேயே கலந்துரையாடினோம்.

தளப்பத்து என்பது ஒரு வகையான இலை, ஒருபாகம் அகலத்தையும், 4முழம் நீளத்தினையும் கொண்டிருக்கும். இதைவிட குறையவும், கூடவும் இருக்கும். ஒருதளப்பத்தினை இரு துண்டுகளாக வெட்டிப்பயன்படுத்தலாம் என்கிறார் காத்தமுத்து. இதனை இருகைகளலாலும் பிடித்தே பயன்படுத்த வேண்டும். தேவையில்லாத நேரம் இதனைமடித்து வைக்க முடியும்;. இரண்டு வருடத்திற்கு மேலும் ஒரு தளப்பத்தினை பயன்படுத்த முடியும். மழையில் நனைய நனைய தளப்பத்து இன்னமும் உறுதியாகவே இருக்கும். இப்போதைய குடைபோன்று கைபிடி இல்லை. தளப்பத்தின் இரு தொங்கல் பகுதியையும் இரு கைகளாலும் பிடித்தவாறே நடக்க வேண்டும். தனது சிறுவயது முதல் 50வயது வரை தளபத்து பயன்படுத்திய ஞாபகமுள்ளதாக காத்தமுத்து சொல்கிறார்.

படுவான்கரைப்பகுதியில் தளபத்து நிற்கவில்லையா? வெளியிடங்களில் இருந்துதான் தளபத்து கொண்டு வந்தார்களா? என்று கேட்க, எங்கட படுவான்கரைப்பகுதியிலும் நின்றதுதான், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினை அண்டிய பகுதியில் தளப்பத்து இருந்தது. அங்குள்ளவர்கள் அதனை வெட்டி விற்பனை செய்வார்கள் அங்கிருந்தும் வாங்கியிருக்கின்றோம் என மூவரும் கூறினர். இப்போது நான் எங்கட பகுதியில் ஒரு இடத்திலையும் அதனை காணவில்லை என்று கவலையுடனும் கூறினர். இதுபோன்று பல மரங்கள் எமது பிரதேசங்களில் இருந்து நீங்கியும் உள்ளன.

எனக்கு தெரிந்த காலத்தில் இருந்து, ஆரம்பத்தில் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், இரண்டு ரூபாய் ஐம்பது சதம், ஐந்து ரூபாய் வரை பணம் கொடுத்து தளப்பத்தினை வாங்கியுள்ளேன் எனக்குறிப்பிட்ட காத்தமுத்து. 'குடைகள் அப்போது முற்றாக இல்லையென்று கூற முடியாது. அப்போதிருந்த போடியார்கள் காம்புக் குடைகளை பயன்படுத்தினர். அவர்களின் தோள்களிலே துண்டும், காம்புக்குடையும் தொங்கும். அவர்கள் மட்டும்தான் அதனைப் பயன்படுத்துவார்கள். அப்போது, சிங்கமார்க், மான்மார்க் என்ற குடைகளே பயன்படுத்தப்பட்டன. இக்குடைகளை போடிமார்கள் மட்டும் தான் பயன்படுத்தினர். நாங்க எல்லாம் தளப்பத்தைத்தான் பயன்படுத்தினோம்' என்று கூறினர். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் நேரமும் மதியம் 1 மணியை கடந்தது. இதனால் அவ்விடத்திலிருந்து எல்லோரும் அகன்று சென்றனர்.

---

## அவள் அழுகிறாள்!

**ப. தெய்வீகன்**

சாய்ந்தமருதில் படையினருக்கும்
தீவிரவாதக்குழுவுக்கும் இடையில்
நடைபெற்ற சண்டையில்
தற்கொலைக் குண்டுத் தாக்குதல்
மேற்கொண்டு இறந்துபோனவனின்
மகளை படையினர் பாதுகாப்பாக
தூக்கிக்கொண்டு வந்து
அம்புலன்ஸ் வண்டியில்
ஏற்றுகிறார்கள். இரத்தக்கறைகளை
துடைத்துவிடுகிறார்கள். ஆயுதங்கள்
தரித்த சீருடைப்படையினர் அவளை
தூக்கிக்கொண்டுவரும்போது
அவள் கதறி அழவில்லை.
அவளுக்கு தன்னைச்சுற்றி
என்ன நடைபெறுகிறது
என்றே தெரியவில்லை.
அதிர்ச்சியிலிருக்கிறாளா அல்லது
நேற்றிரவு வரை அப்பாவும்
இப்படித்தான் ஆயுதத்துடன்
இருந்தாரே, அவருடனும்
இவர்களைப்போல இன்னும் பலர்
ஆயுதங்களுடன் இருந்தனரே
என்று பழக்கப்பட்டுவிட்டாளா
தெரியவில்லை. ஆனால்,
அம்புலன்ஸ் வண்டிக்குள் ஏற்றி,
கிடத்தி வைத்து இரத்தக்கறைகளை
துடைத்துவிடுகின்றபோதுதான், அவள்
கைகள் நடுங்கிக்கொண்டிருப்பது




தெரிகிறது. கூடவே, அப்போதுதான்
அதிச்சியுற்று நினைவு
திரும்பியவள்போல சூழ்நிலையை
வித்தியாசமாக உணர்வதாகவும்
தெரிகிறாள்.

உதடுகள் துடிக்க "வாப்பா" என்று
அழுகிறாள்.

இதயத்தை ஒற்றை நாளத்தில்
பிடித்து இழுத்து வெளியில்
போட்டுவிட்டதுபோல ஒரு கணம்
உணர்கிறேன். சுற்றிலும் எல்லா
சத்தங்களும் காற்றிலிருந்து
விடைபெற்று சென்றுவிட்டன.
அவள் அழைக்கின்ற "வாப்பா"
என்ற சொல்தான் திரும்ப திரும்ப
கேட்ட வண்ணமுமிருக்கிறது.
உலகத்திலேயே கொடியதொரு
சத்தமாக அது திரும்ப திரும்ப
என் காதுகளில் இப்போதுவரை
ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

அந்தச் சத்தமும் அவளது அழுகையும்
அந்த நடுக்கமும் இதயத்தை
சுருள் சுருளாக வெட்டி வெயிலில்
போட்டுவிட்டது போலிருக்கிறது.

ஆனால், இவளது முகத்தை
போனவருடமும் பார்த்தேன்.

சிறையிலிருந்து வந்து தனது
மனைவியின் மரணச்சடங்கில்
கலந்துகொண்டுவிட்டு மீண்டும்
சிறைக்கு அழைத்துச்செல்லப்பட்ட
ஆனந்தசுதாகரனின் மகள் தானும்
சிறைக்கு போகப்போவதாக
சிறைச்சாலை வாகனத்தில்
ஏறினாளே! அவள் முகத்திலும்
இந்தக்கொடூரமான அழுகையை
பார்த்தேன். தகப்பனை
இழந்துகொண்டிருந்த அந்த
இறுதிக்கணங்கள் அவள்
கண்களில் எப்படியெல்லாம்
வெடித்து வழிந்துகொண்டிருந்தது
என்பதைப்பார்த்தேன்.

இந்தச்சம்பவங்கள் எல்லாமே
வெவ்வேறு சூழ்நிலைகளில்
நடைபெறுகின்றன. அவற்றுக்கு
வெவ்வேறு ஆட்களை காரணமும்
காட்டுகிறோம்.

ஆனால், இந்தக்குழந்தைகள்
கேட்பவற்றை கொடுப்பதற்கு
எம்மிடம் ஒன்றுமேயில்லை
என்கின்றபோதும் அந்தக் குரல்களை
கேட்கும்போது நாங்கள் எங்கே
நின்றுகொண்டிருக்கிறோம்
என்று நினைக்கும்போதுதான்
உலகின் அத்தனை புனிதங்களும்
தகர்ந்துபோகின்றன. மானிட
நேயம், மனுநீதி என்றும் போலியாக
கட்டி புழுவேறிப்போயிருக்கும்
அத்தனை அழுக்குகளும் எங்களை
அம்மணமாக்கிவிடுகின்றன.

இன்னமும் அவள்
அழைத்துக்கொண்டுதானிருக்கிறாள்.

"வாப்பா......"

# வதனமார் சடங்கு

அரங்கம் இதழ்களில் வாரம் தோறும் வெளியாகும் வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் சிறப்பான ஒரு முயற்சியின் வெளிப்பாடு. தேடித் தேடி தெரிந்தெடுத்து ஓர் இடத்தில் குவிக்கும் ஒரு உன்னதமான கலைத் தொண்டு 15.02.2019 இதழில் வெளியான சடங்குகள் பற்றிய தேடல் சரியாகவே உள்ளது. அதில் வதனமார் சடங்கு பற்றி எழுதி இருப்பவைகளுக்கு மேலதிகமான சிலவற்றை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருவதே என் நோக்கம், தவிர யாரையும் குறை குற்றம் கூறுவது அன்று.

இந்த வதனமார் சடங்கு மட்டக்களப்பின் கடையெல்லை கிராமமான கதிரவெளியில் பெரிதும் கொண்டாடப்படும் ஒரு சடங்காக எழுபதுகள் வரை இது இருந்தது என்பதற்கு நான் ஒரு வாழும் சாட்சி. என்னைப் போன்ற பலர் இன்னும் அந்தக் கிராமத்தில் ஏராளமாக வாழுகின்றனர். எண்பத்து இரண்டிலிருந்து எனக்கும் இக்கிராமத்துக்கும் தொடர்பற்று போய்விட்டது. அதன் பிறகு அச்சடங்கிற்கு என்ன நடந்தது என்பதை நான் அறியேன்.

கதிரவெளி மட்டக்களப்பு தமிழகத்தின் வடக்கில் அமைந்துள்ள கடைசிக் கிராமம். கிழக்கே மத்தியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் கடலும், வடக்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் மகாவலிக்கிளையும் மேற்கே வயல் சார்ந்த நிலமும் தெற்கே வாகரை கடலேரியை நம்பி வாழ்ந்த மக்களின் கிராமங்களும் சூழ்ந்த ஒரு சிறு நிலப்பரப்பு. இங்கும் மட்டக்களப்பின் பிரதான நிலப்பாகங்களில் காணப்படுவது போல, குடி வழமை,



நல்லதுக்கும் கெட்டதுக்கும் நடக்கும் சடங்கு சம்பிரதாயங்களில் ஒழுங்கு, கால் நடைக்கான விருதுகுறி வைத்தல், அம்மன் வழிபாடு, வீரபத்திரர், வைரவர் வழிபாடு, முருகன், பிள்ளையார் வழிபாடு, கூத்து, வசந்தன் கூத்து, ஊஞ்சல் ஆட்டம், எல்லாமே இங்கேயும் உண்டு. இவற்றுக்கு மேலதிகமாக வன்னித் தம்பிரான் பொங்கலும் வதனமார் சடங்கும் உண்டு. கடைசியாகக் கூறப்பட்ட வன்னித் தம்பிரான் பொங்கல் பட்டிக்காரர்களால் மட்டும் இரகசியமாக செய்யப்படுவது. ஆனால் வதனமார் சடங்கு மிகவும் பிரபல்யமான ஒரு நிகழ்வு. குடிகள் வரிசையில் இச்சடங்கை நிறைவேற்றவே தனியாக ஒரு குடி தோற்றுவிக்கப்பட்டது. அதை பூசாரிகுடி என்று இன்றும் வழங்குவர். இக்கிராமம் மாடு வளர்க்க தோதான இடம். மாடு வளர்த்தலே இங்கு பிரதான தொழில் முயற்சியாக கமத்தொழிலை பின் தள்ளி நின்றது.

## சடங்கின் கிரியை முறைகள்

இந்தப் பூசாரி குடியின் வயது முதிர்ந்தவரே தலைமை பூசாரியாக இருப்பார். இவர் குடியிருக்கும் வளவில் ஒரு மூலையில் ஒரு சிறு குடிசையில் ஒரு பெட்டி வைக்கப்பட்டிருக்கும். அவ்விடத்தை தொடக்குள்ள யாரும் நெருங்கக் கூடாது. சிறு பெட்டி மடப்பெட்டி என்று அழைக்கப்படும். பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று பூசாரியை தவிர யாருக்கும் தெரியாது ஊர் பெரியவர்களால் தீர்மானிக்கப்படும் நாளுக்கு முதல் நாள் அங்குள்ள முகவணை எனும் இடத்தில் படர்ந்து விரிந்து கிடக்கும் ஒரு மருத மரத்தின் கீழ் சேலை, தென்னங்குருத்து கொண்டு அமைக்கப்படும் சிறு கொட்டிலுக்கு தவில் அடித்து, மேற்கட்டி பிடித்து ஊர்வலமாக மடப்பெட்டி கொண்டு வரப்படும்.

அங்கு கிரியைகள் செய்யப்படும். மாலையில் வதனமார் வந்தேறிய பலர், பல வதனமார்களின் பெயர் சூடிக் கொள்ளுவர். இதில் பாலவதனனே முதன்மையானவர் தெய்வ ஆடல் களைகட்டும் பாலவதனன் நீர் எறிந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆண்களை பிடித்துக் கொள்வார். இவர்களை 'இளந்தாரிகள்' என்று அழைப்பர். பால வதனனுக்கு நன்கு தெரியும் பலசாலிகளையும் குழு மாடுகளைப் பிடிப்பதில் கெட்டிக்காரர்களையும், அன்று இரவே தேவையான பொருட்களோடு தயாராகி விடுவர் இளந்தாரிகள். பெயர் மட்டும் தான் இளந்தாரி வயது அறுபதையும் மீறி நிற்கும்.

## வெளுக் கயிறு

பலம் பொருந்திய காட்டு மாடுகளை பிடிக்கும் விடயத்தில் வெளுக் கயிறு என்னும் ஒருவகைக்கயிறு மிகவும் முக்கியம், யானைகளால் கூட அறுக்க முடியாத அக் கயிறுகள் மான், மரை, போன்ற மிருகங்களின் புதிய தோல்கள் சிறு சிறு இழைகளாக வகுந்து எடுக்கப்பட்டு பின்னப்படுவது. மகா பலம் பொருந்திய இதில் சுருக்கு வைத்தே காட்டு மாடுகளைப் பிடிப்பது வழக்கம். அதிகாலையில் பூசாரி பாலவதனன் துணையோடு இளந்தாரிகளை காவலிட்டு காட்டுக்கு அனுப்புவார் அவர்களும் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக நடந்து சென்று காட்டோடு சங்கமிப்பர்.

இளந்தாரிகள் சடங்கு முடியும் மட்டும் தங்கள் வீடுகளுக்கு போக முடியாது. அவர்களுக்குரிய உணவு தற்காலிக கோயிலான 'சடங்கடி' யிலே வழங்கப்படும். சமையலுக்குரியதும் பூசைக்குதவும் பொருட்களும் குடி மக்களே கொடுப்பார்கள். நெல்லு, மரக்கறி போன்றவை உட்பட ஒவ்வொரு குடியும் வழங்கும். சமைத்த எதுவும் அங்கு கொண்டு போக முடியாது. பச்சையாக கொடுக்க வேண்டும். சடங்கடிக்கு தொடக்கில்லாத பெண்கள் போய் நெல்குற்றி அரிசாக்கி மட்டும் கொடுப்பர். சிலவேளை ஆண்களே அதையும் செய்வர். சமைப்பதும் அவர்களே அந்த நோன்பு சோற்றையே பூசாரிகள், வதனமார் வந்தேறியவர்கள், இளந்தாரிகள் மற்றும் அங்கு வேலை செய்பவர்கள் உண்பர்.

மூன்று நாட்கள் இப்படிக்கரையும். இளந்தாரிகளின் நடவடிக்கைகள் பரம ரகசியம் யாருக்கும் மாடு பிடிபட்டதா இல்லையா என்று சொல்ல மாட்டார்கள். மூன்றாம் நாள் மாலையில் ஊரில் இருந்து கொண்டு போன பட்டி மாடுகளோடு (எருமை மாடுகள்) காட்டு மாடுகளைப் பிணைந்து கடும் பிரையாசைப் பட்டு சடங்கடிக்கு சாய்த்து வருவர் இளந்தாரிகள்.

தற்போது தற்காலிகமாக இருக்கும் சடங்கடிக்கு மிக அண்மையில் அமைந்திருக்கும் வைபவம் நிறைவேறும் சடங்கடி அமைந்துள்ளது. ஏறத்தாழ ஒரு ஏக்கர் நிலப்பரப்பு வட்ட வடிவமாக காட்சி தரும் சுற்றி வர பற்றைகள் மண்டி வளர்ந்து கிடக்கும் இங்கு, தற்காலிக கொட்டில் இடம் மாறும் அத்தோடு ஒரு பக்க ஓரத்தில் ஏறத்தாழ பத்து அடி உயரத்தில் (நில மட்டத்தில் இருந்து) நான்கு வயிரம் பாய்ந்த ஆறு அடி சுற்றளவு மரத்தூண்கள் வரிசையாக நடப்பட்டிருக்கும். அதன் வயது நிச்சயமாக நூற்றை தாண்டும். மாரி காலத்தில் அவ்விடத்தை கடந்து செல்லும் யானைகளால் கூட அவற்றை சாய்க்க முடிவதில்லை. மாலை இருள் சூழும் முன்பே இளந்தாரிகள் சாய்த்து வரும் குழு மாடுகள் அத்தூணில் கட்டப்படும். அங்கு வந்து சேரும் நூற்றுக் கணக்கான மக்கள் அங்கே பயமின்றி அமர்ந்திருப்பது இளந்தாரிகளின் திறமையிலும் வெளுக்கயிற்றின் வலிமையிலுமே.

இருள் கவிழும் போது நூற்றுக்கணக்கானோர் குடும்பத்துக்கு ஒரு பாய் வீதம் சுமந்தபடி வந்து சேருவர். இருள் நன்கு கவிழ்ந்த பின்னர் கோயில் பந்தலில் பாலவதனன் உருக்கொண்டு ஆடத் தொடங்குவார். முதல் நிகழ்வாக நீராட்டல் இடம்பெறும். முகவணையில் வந்து முடியும். ஆற்றிலேயே இது நடக்கும். இந்த ஆறு மகாவலி கங்கையின் வெருகல் கிளையிலிருந்து வெட்டப்பட்ட ஒரு வாய்க்கால், இன்று ஒரு சிறு ஆறாக ஓடிவருகிறது. இவ்வாய்க்கால் மிகவும் பழமையானது. விவசாயத்தை மனதில் கொண்டு இவ்வாய்க்கால் வெட்டப்பட்டது என்பதை விட வருடம் முழுவதும் கால் நடைகளுக்கு நீர் கிடைக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டது என்பதே உண்மை.

அண்மையில் அந்த ஊருக்கு போன போது பார்த்தேன் முகவணை என்ற ஆற்றை காணமுடியவில்லை காய்ந்து போய் புழுதி பறக்கக் கிடந்தது. ஆற்றுக்கு நீர்விடும் மதகுகள் சிதைந்து போனதாலும் மகாவலியின் திசைத்திருப்பின் விளைவால் வெருகல் கங்கை நீர் வரத்து நின்று போனதாலும் முகவணை ஆற்றுக்கு நீர்வராததாலும் இது இப்போது வறண்டு விட்டது. மகாவலியில் வெள்ளம் புரளும் போது கதிரவெளியில் மக்கள் நீராடி மகிழ்ந்த காலம் மலை ஏறி விட்டது.

சரி நாம் சொல்ல வந்ததை சொல்லி முடிக்கலாம். பூசாரி மடப்பெட்டியை தூக்கிவர பின்னேயும் முன்னேயும் வதனமார் வந்தேறியவர்கள் தெய்வமாடிச் செல்வர். பாலவதனன் மடப் பெட்டிக்குள் இருக்கும் பொருட்களோடு நீரில் மூழ்கி எழுவார். அதைத் தொடர்ந்து மற்றைய வதனமாரும் நீராடுவர். அந்த மடப்பெட்டிக்குள் இருந்து எடுத்து நீராட்டப்படுவது ஒரு சிலையும் ஒரு சிறிய புல்லாங்குழலும் தான் என்று நான் அரசல் புரசலாக அறிந்திருக்கின்றேன்.

நீராடச் சென்றவர்கள் சடங்கடிக்கும் வந்து சேர்வர். அதன் பின் சடங்கடியில் குழுமாடுகளின் சத்தமும் துள்ளலும் ஒரு காட்சியாகும். இந்த இடைவெளியில் வயது வித்தியாசமில்லாது இரண்டு மூன்று இடங்களில் வசந்தன் கூத்தை அரங்கேற்றுவர். வயது போன கிழடு கட்டைகளின் பாட்டும் ஆட்டமும் நம்மை பரவசத்திலாழ்த்தும். நேரம் நடு இரவை தாண்டி விடும் அப்போது பொங்கலிடுவர். பாலவதனன் உட்பட அனைத்து வதனமார் வந்தேறியவர்கள் தெய்வம் ஆடத் தொடங்குவார்கள். கட்டி இருக்கும் குழு மாடுகளை தொட்டு விளையாடி வருவர். பக்தி உணர்வோடு சடங்கடி கட்டுண்டு கிடக்கும். கிழக்கு வெளிக்கும் வரை ஆட்டம் தொடரும் இறுதியில் பூசாரி குழுமாடுகளின் காது நுனிகளை அறுத்து இரத்தபலியிடுவர்.

சன்னதம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து சடங்கு முடிவுக்கு வரும். சடங்கில் கலந்து கொண்டவர்கள் பாய்களைச் சுருட்டிக் கொண்டு வீடு நோக்கி நடப்பர். நிலம் தெரியும். கிழக்கு சிவந்து கிடக்கும் ஆண்களில் அநேகர் முகவணையில் இறங்கி ஆற்று மணல் எடுத்து பல் துலக்கி நீரில் மூழ்கி மூழ்கி எழுவர். பின் வீடு நோக்கி நடப்பர். சூரியனும் நன்றாக மேலெழுந்து சடங்கிற்கு போகாதவர்களை தட்டி எழுப்புவான்.

இறந்து போன காலத்தை உயிர்ப்பித்து என்னை அதற்குள் அழைத்துச் சென்ற பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு என் நன்றிகள். இந்த நிகழ்வு இடையர்களோடு கண்ணன் செய்த விளையாட்டுக்களை நம்மூரில் இடையர்கள் நினைவுகூரும் ஒரு சந்தோஷமான நிகழ்ச்சி என்று பலர் கூறக்கேட்டிருக்கின்றேன்.

ஏனா நவரெத்தினராசா குரூஸ்

# கண்ணீரால் ஒரு ஆறுதல்

யாஸின் அரபாத்
வாழைச்சேனை

என் தோளில் உன்
தலை சாய்த்து அரவணைக்க
உள்ளம் நாடினாலும்
உன் முகம் பார்த்து
ஆறுதல் கூட
சொல்ல முடியாமல் வெட்கத்தால்
தலை குனிகிறேன் தோழா
கண்ணீராலான என்
ஆறுதலை ஒரு கணம்
ஏற்றுக்கொள்.
இரத்த வெறி கொண்டு
அரக்க குணமுடைய
ஈனப்பிறவிகளால் அப்பாவி
உயிர்களை பலியெடுத்த
இந்த ஈடில்லா துயரை எண்ணி
அனுதினமும் வருந்துகிறேன்
கண்ணீராய் வடிக்கின்றேன்.
உம் மதம் போல்
எம் மதத்திலும்
வன்முறைக்கு இடமில்லை
என்ற உண்மையை
நீ உணர்ந்து
பொறுமையாய் இருந்ததனால்
எம் மத்தியில் பெருமையை
பெற்றுக்கொண்டாய்
கயவர்களின் நோக்கத்தில் கரியையும்
பூசிவிட்டாய்
உயிர்த்தெழுந்த
நன்நாளில் உயிர் நீத்த
உன் உறவுகளுக்காய்...
அல்லவே!!
நம் உறவுகளுக்காய்
உன்னோடு சேர்ந்து
கண்ணீரில் பங்கு கொள்கின்றேன்
அவர்களின்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கிறேன்.
தீவிரவாதம் ஒழிய வேண்டும்
அவ் அரக்கர்களின் நோக்கம்
பொய்க்க வேண்டும்
உறவுகள் போன்ற நம்
ஒற்றுமையை சீரழிக்கும் எண்ணம்
உடனே தோற்கடிக்கப்பட வேண்டும்..
தூரத்து உறவுகளாய்
இருந்த நாம்
இன்று இரத்த
உறவுகளாய் மாறிவிட்டோம்
என்ற ஒற்றுமையை
உலகுக்கு காட்டி
தோளோடு தோள் சேர்த்து
போராடி
வேரோடு பிடுங்கியெறிந்து
இந்த மண்ணைவிட்டே
விரட்டியடிப்போம்
இக் காட்டு மிராண்டிகளை

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 34

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

# கற்போம்

### இலக்கணம்

1. உயிர்மெய் எழுத்துப் பற்றி விளக்குக.

புள்ளி விட்டு அவ்வொடு முன்னுரு ஆகியும்
ஏனை உயிரோடு உருபு திரிந்தும்
உயிரளவாய் அதன் வடிவொளித்து இருவயில்
பெயரொடும் ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய். (நன். சூ. 89)

ஒற்றுக்கள் பெற்று நின்ற புள்ளிகளை விட்டு அகரத்தோடு சேர்ந்த போது பழைய வடிவைப் பெற்றும் மற்ற உயிர்களோடு சேர்ந்த போது தத்தம் வடிவில் வேறுபட்டும் தம்மேல் ஏறிய உயிரின் அளவே தமக்கு அளவாகி (மாத்திரையாகி) அந்த உயிரின் வடிவைத் தம்முள்ளே மறைத்து உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்துப் பிறந்து, ஒற்றொலி (மெய்யொலி) முன்னாகவும் உயிர் ஒலி பின்னாகவும் உயிர்மெய் என்னும் பெயரோடு வரும்.

'உருபு திரிந்தும்' என்பது, 'உருவு திரிந்தும்' என்றும் 'வடிவொளித்து' என்பது, 'வடிவொழித்து' என்றும் நன்னூல் உரையாசிரியர்கள் சிலரால் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

' க் ' என்னும் மெய், புள்ளியை விட்டு அகரத்தோடு சேர்ந்து 'க' என்று வரும். இவ்வாறு ஏனையவற்றையும் கண்டுகொள்க.

சார்பெழுத்தின் விரியைச் சொல்லுகின்ற 61ஆவது சூத்திரத்திலே "உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டு" என்று உயிர்மெய் எழுத்தின் எண்ணிக்கையை நன்னூலார் சொல்லியுள்ளார். அதுவும் நேரடியாக 216 என்று சொல்லவில்லை. 'இரட்டு நூற்றெட்டு' என்றுதான் சொல்லியுள்ளார். அதாவது நூற்றெட்டின் இருமடங்கு என்றார்.

மேலும், இன்னொரு விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும்.

மெய்யெழுத்தின் மாத்திரை அரை. உயிர்க்குறிலின் மாத்திரை ஒன்று. உயிர்நெடிலின் மாத்திரை இரண்டு. இவற்றைக் கருத்திற்கொண்டு க, கி, … என்று அமைகின்ற உயிர்மெய்க்குறிலின் மாத்திரை ஒன்றரை என்றோ கா, கீ, … என்று அமைகின்ற உயிர்மெய்நெடிலின் மாத்திரை இரண்டரை என்றோ சொல்லக்கூடாது. அதாவது மெய், குறிலுடன் சேர்கிறது என்பதற்காகவோ மெய், நெடிலுடன் சேர்கிறது என்பதற்காகவோ மெய்யின் அரை மாத்தரையைக் குறிலுடனோ நெடிலுடனோ கூட்டிச் சொல்லக்கூடாது. மெய்யுடன் குறில் சேர்ந்த நிலையில் உள்ள உயிர்மெய்க்குறிலுக்கு (உ-ம்: க, கி,…) உயிர்க்குறிலின் மாத்திரையாகிய ஒன்று என்பதுதான் அதன் மாத்திரை என்பதைக் கவனித்துக்கொள்க. அவ்வாறே மெய்யுடன் நெடில் சேர்ந்த நிலையில் உள்ள உயிர்மெய்நெடிலுக்கு (உ-ம்: கா, கீ …) உயிர்நெடிலின் மாத்திரையாகிய இரண்டு என்பதுதான் அதன் மாத்திரை என்பதைக் கவனித்துக்கொள்க. இதைத்தான் 'உயிரளவாய்' என்பது விளக்குகிறது.

2. ஆய்த எழுத்துப் பற்றி விளக்குக.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. (நன். சூ. 90)

மூன்று புள்ளி வடிவினதாய் அமைந்துள்ள ஆய்த எழுத்தானது, குறிலெழுத்துக்கும் அதாவது குற்றெழுத்துக்கும் வல்லின மெய்யுடன் சேர்ந்த அதாவது உயிர்மெய் வல்லின மெய்க்கும் இடையில் வரும்.
(உ-ம்: எ.்.கு, க.்.சு, க.்.டு, அ.்.து, அ.்.பு, க.்.று)

குற்றெழுத்தைத் தொடர்ந்து ஆய்தம் வரும் என்பதை எடுத்துக்காட்ட 'குறியதன் முன்னர்' என்று அதாவது 'குற்றெழுத்தின் முன்னர்' என்று சொல்லப்பட்டுள்ளதே தவிர, உயிக்குற்றெழுத்து என்றோ உயிர்மெய்க் குற்றெழுத்து என்றோ சொல்லப்படவில்லை. அக்குற்றெழுத்தானது, உயிக்குற்றெழுத்தாகவோ உயிர்மெய்க் குற்றெழுத்தாகவோ இருக்கலாம்.
(உ-ம்: எ.்.கு, க.்.சு)

மேலும், தனிக் குற்றெழுத்து என்றும் சொல்லப்படவில்லை. ஆக, குறிலிணையினை அடுத்தும் ஆய்தம் வரலாம் என்பது கவனிக்கத்தக்கது. குறிலிணை என்பது, இரண்டு குறில்களை அடுத்து வருவதைக் குறிக்கும்.)
(உ-ம்: அழ.்..்.கு, வில.்..்.கி)

சார்பெழுத்தின் விரியைச் சொல்லுகின்ற 61ஆவது சூத்திரத்திலே "உயர் ஆய்தம் எட்டு" என்று ஆய்த எழுத்தின் எண்ணிக்கையை நேரடியாக நன்னூலார் சொல்லியுள்ளார். இங்கு முற்றாய்தம் என்று சொல்லவில்லை. உயர் ஆய்தத்துக்கு உரை சொல்லும் முகவை இராமானுச கவிராயர், 'குறுகாத ஆய்தம் எட்டு' என்கிறார். சார்பெழுத்தின் வகை சொல்லும் போது 'ஆய்தம்' என்றுதான் நன்னூலார் சொல்லியுள்ளார். முற்றாய்தம் என்று சொல்லவேயில்லை.


ஆய்தத்தின் எண்ணிக்கை எட்டு என்பது முகவை இராமானுச கவிராயரால் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

1. குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லின மெய்க்கும் இடையில் வருதல். - 06
(உ-ம்: எ.்.கு, க.்.சு, க.்.டு, அ.்.து, அ.்.பு, க.்.று)

2. புணர்ச்சி விகாரத்தால் வருதல். - 01
(உ-ம்: அ.். கடிய)

3. செய்யுள் விகாரத்தால் வருதல். - 01
(உ-ம்: வில.்..்.கிய வீங்கிரு ளோட்டுமே மாத
ரில.்..்.கு முத்தி னினம்)

## டெங்கு டெங்கு + டெங்குடு டெங்குடு



எங்கும்நீ நிறை தெங்கு கோம்பைகள்
அங்கே தானுறை எங்கள் வாழ்க்கைகள்
தங்க மாஅறை தந்த வீடுகள்
பொங்க முரசறை வாழ்க மானிடர்

கொஞ்சம் நீர்நிறை பண்ட பாத்திரம்
தஞ்சம் நாமுறை செய்தோம் தோத்திரம்
பஞ்சமோ யில்லை எங்கள் கோத்திரம்
நெஞ்சம் தான்நிறை தந்தோம் பூச்சரம்

எங்கள் சேவையே மக்கள் சேவையாம்
எம்மைச் சாட்டியே கொஞ்சம் வாழுதாம்
மெல்லும் வாய்க்கொரு அவலும் நாங்களாம்
எம்மைக் காப்பதே இங்கே நீங்களாம்

டெங்குடெங்கு டெங்கு டெங்குடு டெங்குடு
நாங்கவாய வைச்சா டெங்குடு டெங்குடு
தங்கும் வாழிடம் இப்படித் தான்வைத்தா
எங்க ஆட்சிதான் நீங்க வீழ்ச்சிதான்

**திரு. சிவலிங்கம்**
24/39, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## கணவரை இன்னும் ஏன் தடுத்து வைத்துள்ளீர்கள்?'



திருமதி செல்வராணி இவ்வாறு தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அரசியல் தலைமைகள் என்னுடைய கணவரின் விடுதலை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தியோ அல்லது பாராளுமன்றத்தில் குரல்கொடுத்தோ உதவவில்லை. எனவே எனது கணவரை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனமெடுத்து விடுவிக்கப்படவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## இன்னொரு வார்த்தையில்.

**சித்ரா**

'இன்னொரு வார்த்தையில்
நிலவுக்கு என்னை அழைத்துச் செல்'
என்று பாடத் தொடங்கினாய்
மொழியின் கனவையும்
எனது வண்ணங்களையும்
அந்த இன்னொரு வார்த்தையில்
குழைத்துப் பாட
முடியுமா உன்னால்?
மயிலிறகின் மென்மையெனத்
தடவிவிடும் என் அன்பு
கல்முனைக் கடற்கரைப் பள்ளியில்
துயில் கொள்ளும்
அவுலியாவின் மந்திரம்
நிறைந்தது
தாலாட்டும் கொண்டது!
குழந்தைகளையும் கூடக்
கொன்றொழிக்கும்
குண்டினால் கிலி கொண்டு
சாய்ந்தமருதின் குடியிருப்பிலிருந்து
சித்திரை மாதக் கொளுத்தும்
வெயிலில்
நடந்து களைத்த பிள்ளைக்கும்
தேடிக் களைத்த
இராணுவத்தானுக்கும்
ஒன்றாய் நிழலளித்த அவுலியா
வளவுப் பெரு மரம் போலத்
தண்மை கொண்டது.
அந்த இன்னொரு வார்த்தையில்
உனது கண்களையும்
புன்னகையையும் கலந்து பேசு
அந்த வார்த்தை வாசமாய்ப் பரவட்டும்
வாழ்வு
சிலபொழுது
மயிலிறகின் பச்சையும்
நீலமும் பளபளப்பும்
தொடுகையில் அளவிட ஒண்ணா
மிருதும் கொண்டு
பொக்கிஷமாய் கிறங்கும்
உனது
இன்னொரு வார்த்தையின் வாசம்
அதில் பரவட்டும்
வாழ்வின்
பல பொழுது
தீயாய் இறங்கும் இத்தீவில்
உனது வார்த்தை
எனது தீக்காயங்களில்
தேன் பூசட்டும்

தொடர்ச்சி...

## தேவாலயக் குண்டு வெடிப்புகளும் எமது அரசியலும்

மகிழ்ந்து அந்த இரத்த வாடையினைச் சுவைத்து மிஞ்சியிருக்கின்ற மக்களின் அச்சத்தினையும் பயத்தினையும் ஒரு நாடக ரசிகனைப் போலிருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருக்கப் போகிறார் போலுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களோ யார் கூடிய நாட்டுப் பற்றாளன் என்பதை நிரூபிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பமாக பாராளுமன்றத்தையும் ஊடகங்களையும் பயன்படுத்தி ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சுமத்தி இலாபங்களை ஈட்டப் பார்க்கிறார்கள்.

தமிழர்களுடைய இனப் பிரச்சினையிலும் இதே நிலைமையினைத்தான் சுதந்திரம் கிடைத்த காலந்தொடக்கம் இந்த அரசியல் கட்சிகளும் நாட்டின் தலைவர்களும் செய்து கொண்டுவருகிறார்கள். அதனைப் படிப்பினையாகக் கொண்டு இவ்விடயத்திலாவது சுயநல அரசியல் போக்கிலிருந்து விடுபட்டு அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் இதயசுத்தியுடன் ஒன்றுபட்டு உழைக்க முன்வரும் போதுதான் எமது நாட்டின் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையும் நிலைநாட்ட முடியும் என்பதை இவர்கள் கருத்தில் கொள்தல் வேண்டும்.

எனவே தமிழர்களுடைய அரசியலும் சரி எமது தேசிய அரசியலும் சரி நாட்டுக்கும் மக்களுக்கும் இல்லாது அவரவருக்குரியதாக இருப்பதை நாம் எப்போது உணரப்போகிறோம் என்பதே எம் மக்கள் முன்னுள்ள கேள்வியாகும்.

தொடர்ச்சி...

## தம்பிலுவில் கண்ணகி அம்மன் ....

நடைமுறைத் தீர்மானங்களை எடுக்கவேண்டி நேரிட்டுள்ளது என ஆலய நிருவாகம் திருக்கோவில் பிரதேசசபைக்கும் திருக்கோவில் பொலிசாருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இவ் ஆலயத்தின் வருடாந்த வைகாசித் திருக்குளிர்த்திச் சடங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகி 21ஆம் திகதி குளிர்த்திபாடுதலுடன் நிறைவடையவிருக்கிறது. வழமையாக வைகாசிச் சடங்கில் நிறுவப்படும் கடைத்தெருக்களை இம்முறை நிறுவ இடமளிப்பதில்லை. அமைதியாகச் சடங்கு இடம்பெறும். சடங்கு நாட்களில் உள்வீதிவலம் வருதல் மட்டுமே நடைபெறும். வெளிவீதி ஊர்வலம் இம்முறை தடைசெய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் கூட்டம் கூட்டமாக இல்லாமல் ஆலயத்திற்கு வந்துசெல்ல ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஆலயத்தினுள் ஆண்பக்தர்கள் மேலங்கி இல்லாமல் வேட்டிமட்டும் அணிந்து வருதல் வேண்டும். வேட்டி அணிந்துவராத பக்தர்களை அனுமதிப்பதில்லை.

மேலும் சடங்குகாலத்தில் எத்தகைய கலை நிகழ்ச்சிகளோ களியாட்ட நிகழ்ச்சிகளோ நடாத்துவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வழிபாடுகள் மட்டுமே நடைபெறும்.
திருக்கோவில் பிரதேசப் பாதுகாப்புச்சபைக் கூட்டத்திலும் ஆலய நிருவாகசபையால் இது விடயம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## புர்கா தடையின்...

என்கிற சிங்களத்தில் ஒரு சொல்லை பயன்படுத்தி வந்தார்கள். தலையைத் துண்டித்து மரண தண்டனையை நிறைவேற்றுகிற கறுப்புத்துணியால் மூடப்பட்ட கொலைஞரையும் அந்தப் பெயர் கொண்டு அழைப்பார்கள். அதுபோல யுத்த காலத்தில் சில தமிழர்களின் முகத்தை கறுப்புத் துணியால் மூடி கண்கள் மட்டும் தெரியக் கூடிய வகையில் இராணுவம் அழைத்துச் சென்று "ஆள்காட்டி"களாக பயன்படுத்தி வந்தது. அவர்களை "தலையாட்டி" என்றும் அப்போது அழைத்தார்கள். அவர்கள் பேசமாட்டார்கள் இராணுவம் கூட்டிச்சென்று காட்டுபவரை அவர்தானா என்று உறுதிப்படுத்துவதற்காக தலையை மட்டும் ஆட்டி சைகை செய்ததும் சந்தேகநபரை இழுத்துச் செல்வார்கள். அல்லது கொன்றுவிடுவார்கள். அவர்களையும் "கோனி பில்லா" என்று தான் அழைத்தார்கள். சிறு குழைந்தைகளுக்கு பொதுவாக கோனி பில்லா கதைகள் சொல்லி கட்டுப்படுத்தும் வழக்கம் சிங்கள சமூகத்தில் இருக்கிறது.

**இவர்கள் சொல்லும் சேதி**

பெண்கள் எதை அணிய வேண்டும் நீக்க வேண்டும் என்கிற உடல் மீதான கட்டுப்பாட்டை ஆணாதிக்க அதிகார மையங்களே உருவாக்கி வந்திருக்கின்றன. ஆண்களாலும், ஆணதிகார பண்பாட்டு நிறுவனங்களாலும் நிறுவனமயப்படுத்தப்பட்ட உடைக் கட்டுப்பாட்டு கருத்தாக்கங்கள் காலப்போக்கில் பெண்களே அது தமது உரிமை என்று கூறுமளவுக்கு சமூகமயப்பட்டுவிடும். இன்றும் ஆணாதிக்க அதிகார மையங்கள் மெதுவாக இதனை நாங்கள் திணிப்பதில்லை பெண்கள் தாங்களே இது தொடர்பான முடிவை எடுக்க அதிகாரமுடையவர்கள் என்று மெதுவாக திருப்பி விட்டு காலப்போக்கில் பெண்ணின் உரிமையாக, பெண்ணுரிமையாக இப்போது புனைய முயல்வதை எவரும் அவதானிக்கலாம். இதனை பெண்ணுரிமை முழக்கமாக முன்னெடுக்க ஏனைய மனித உரிமை, பெண்ணுரிமையாளர் தருணத்தில் கைகோத்துவிடுகின்றனர்.

இப்போது ஜம்மியதுல் உலமா முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிகளாக காட்டிக்கொண்டு பொது இடங்களில் பயணிக்கும் போது முகத்தை மூடும் வண்ணம் அணியப்படும் புர்கா, நிகாப் போன்றவற்றை அணிய வேண்டாம் என முஸ்லிம்களுக்கு 25ஆம் திகதி அறிவித்திருந்தது. இந்த தீர்மானத்தை எடுத்ததில் பெண்களின் பங்கு என்ன?

புதிய அவசரகால விதி வருமுன்னரே மேல் மாகாண ஆளுநர் எம். அசாத் சாலி கடந்த ஏப்ரல் 26 அன்று ஊடக மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போது.

"...முகத்தை மறைக்கும் இந்த ஆடை எமது நாட்டுக்கு பொருந்தாத ஒன்று. எமது பாட்டிமார் தமது சேலைகளால் தான் தலையும் போர்த்திக்கொண்டார்கள். அந்தப் பரம்பரையில் நாம் வந்தோம். வெளிநாட்டில் உள்ளவர்கள் முகத்தை மூடிக்கொண்டார்கள் என்பதற்காக நாமும் மூடத் தொடங்கியதால் எழுந்த பிரச்சினை தான் இது. வெளிநாடுகளுக்கு வீட்டு வேலைக்குச் சென்ற பெண்கள் திரும்பிவரும்போது கருப்பு உடைகளை அணிந்து வந்தார்கள். அதை எமது உடை வடிவமாக்கிக்கொண்டோம். இதனால்தான் நாசமாய்ப் போனோம். கருப்பு உடையை அணியாதீர்கள் என்றோம் கேட்கவில்லை. முகத்தை மூடாதீர்கள் -என்றோம் கேட்கவில்லை. நான் இப்போது "நிகாப் அணிந்து எந்தவொரு மாணவியும் பாடசாலைக்கு வரமுடியாது, அதுபோல நிகாப் அணிந்து எந்த தாய்மாரும் பாடசாலைக்குள் நுழைய அனுமதிக்கவேண்டாம்" என்று சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கும்படி எனது கல்விச் செயலாளருக்கு ஆணையிட்டிருக்கிறேன். இந்த நிலைமையை முன்கூட்டியே தடுப்பதற்காக எமது மதத் தலைவர்களிடம் எத்தனையோ முறை கேட்டுக்கொண்டிருந்தோம். அவர்கள் செவிகொடுக்கவில்லை. போதாதற்கு கருப்பு ஆடைகளுக்குப் பதிலாக வேறு நிறங்களில் ஆடைகளை நாங்களே விநியோகித்தோம். அப்படியும் மாறவில்லை...." என்றார்

பேரியல் அஷ்ரப் சிரச தொலைகாட்சி நடத்திய "பெத்திகட" எனும் நிகழ்ச்சியில் 29.04.2019 அன்று சிங்களத்தில் வழங்கிய உரையாடலில் இப்படி குறிப்பிடுகிறார்.

"தமது முகங்களை அந்நியர்களுக்கு காட்டுவதை விரும்பாமல் சுயவிருப்பில் தமது முகங்களை மூடிக்கொள்ளும் பெண்களை நான் அறிவேன்... அதே வேளை சாரியொன்றை அணிந்ததும் தேவைப்படும் இடங்களில் சாரியை தலையில் போர்த்திக்கொள்ளும் வழிமுறையே ஆண்டாண்டு காலமாக நம்மிடம் இருந்தது. வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு பின்பற்றும் மத வழிமுறைகளை இங்கே கொண்டுவந்தே சேர்த்தார்கள். இலங்கையின் கலாசாரத்துக்கு ஒத்துவரக்கூடிய இஸ்லாம் மார்க்கம் நம்மிடம் இருந்ததே. நாடு சென்றதும் பள்ளிவாசல்களை காட்டுங்கள் என்று வெளிநாட்டிலிருந்து ஏராளமான பணம் வழங்கப்பட்டது. பள்ளிவாசலுக்கு தேவையானவற்றை செய்வதை விட அவர்களுக்கு கிடைத்த பணத்தை எப்படி செலவு செய்வது என்கிற பிரச்சினை எழுந்தது எங்கெங்கும் பள்ளிவாசல்களைக் கட்டிக் குவித்தார்கள். நாம் அவற்றைக் கவனிக்கத் தவறியிருந்தோம். பிரிவுகள் உண்டாகின அவற்றுக்கென தனியான வழிமுறைகள் உருவாயின. வெள்ளிக்கிழமைகளில் குறிப்பிட்ட எண்ணிக்கை இருந்தால் தான் ஜூம்மாவை நடத்தலாம் என்கிற ஒரு விதி இருந்தது. அந்த விதிகளைத் தாண்டினார்கள்..."

முஸ்லிம்களுக்கு எதிரான பொதுப்புத்திகளின் அபிலாசைகளுக்கு தீனியாக இந்த சம்பவம் வந்து முடிந்திருக்கிறது. முஸ்லிம்களுக்கு எதிரான நிகழ்ச்சிநிரலின் ஒரு அங்கம் ஓரளவு நிறைவேறியிருக்கிறது. அந்நிகழ்ச்சிநிரல் பட்டியலில் இனி அடுத்தடுத்து நிறைவேறவிருப்பவை என்ன என்பதே முஸ்லிம் சமூகத்திடம் எஞ்சியிருக்கும் பீதி.

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 120ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd